KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED
LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

# வலு

ஜூலை – செப்ரெம்பர் – 2019 | காலாண்டிதழ் | இதழ் – 23

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி
வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

ரூபா
100/=

ISSN : 2513 - 2989
ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

04 வலிகளை உரமாக்கி
எழுந்த விருட்சங்கள்!
அசாதாரண புருஷர்கள்...

37 முற்றத்து
மல்லிகை





வெளியீடு :
கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்

## கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தின்
# 6 ஆவது ஆண்டு நிறைவு விழா



























ISSN : 2513 - 2989 ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

# வலு

ஜூலை – செப்ரெம்பர் 2019 காலாண்டிதழ் இதழ் – 23

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி
வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

**பிரதம ஆசிரியர்**

திரு. க. தர்மசேகரம்

**நிர்வாக ஆசிரியர்**

திரு. நா. கீதா கிருஷ்ணன்,
karuvivalu@gmail.com
Tel : 076 638 5563

**ஆசிரியர் குழு**

திரு. செ. சசிராஜ்,
திரு. ச.க. தேவதாசன்
திரு. செ. பிரிந்தாபரன்
செல்வி. சு. கானப்பிரியா

**இதழ் குழு ஆலோசகர்**

திரு. கணபதி சர்வானந்தா

**வெளியீடு**

**கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்**
இல. 1166 / 15, அருளம்பலம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 205 4224

## பொருளடக்கம்

எண்ணக்கிண்ணம் – கவிதை - 02

பொதுமைப் பொறிமுறை - 03

வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் - 04
ஏ.ஜே. ஞானேந்திரன்

வலைவெளி ஓட்டிசம் (Autism) - 06
பாலபாரதி

வலு தரும் ஜோதிடம் -09
V.A. சிவராசா

செய்தி சாரம் - 11

தசரசம் - 12

எழுதுங்கள் வெல்லுங்கள் - 36

முற்றத்து மல்லிகை - 37

உணர்திறன்மிக்க கைகள் உருவாக்கம் - 40

சிறுகதை
அஸ்தமித்தது சூரியன் - 42

இலக்கியத்தில் மாற்றுத்திறனாளிகள் - 44



# எண்ணக்கிண்ணம்

## வானுயர வாழ்ந்து காட்டிடுவீர்

ஆற்றலா லொரு மாளிகை யமைத்தங்கே
ஏற்றம் மிகக்கொண்டு வாழ்ந்திடுவீா - தூற்றும்
ஞானக்கண் குருடான நபர்களுக் கெல்லாம்
வானுயரக் காட்டிடுவீர் வாழ்ந்து.

அங்கங் குறைவாயொரு பிள்ளை பிறந்துவிட்டால்
பொங்கி துயரமதாற் பொருமிநிற்பா் - சங்கம்வைத்து
கா்மவினை கடந்தகாலம் செய்தபழி என்றுபலா்
சா்ப்பவிடங் கொட்டிடுவா் சதியாய்.

விபத்திலே கால்போம் வேறுவழி கண்போம்
உபத்திரவ நோயா லுறுப்பிழக்கும் - அபத்தமென
ஊா்பேசு முரைகளா லுளம்நோகும் வருந்தாதீா
பாா்மே லிதுவழமை பாரீர்.

கல்வியிற் சிறந்ததோா் கடமையி லுயா்ந்தோரென
வெல்வதற்கு யாருமலா மனிதா்களாய் - சொல்லரிய
சாதனைகள் படைத்து சரித்திரத்தில் நிலைத்துள்ளாா்
வாதமில்லை இக்கருத்தி லென்றும்.

எதிா்நீச்சல் போட்டுலகில் எதிா்த்தடை தகா்த்தபலா்
எதிா்கால சந்ததிக்கு வழிகாட்டி - பதித்திருந்தாா்
சாதனைகள் பட்டியலிற் தங்கள்பெயா் காணுகிறோம்
வேதனைகள் விட்டெழுவீா் வரைந்து.

மாற்றுத் திறனாளிகள் மனம்நோகா வழிநடப்பீா
ஆற்ற லவா்க்கதிகம் அறிவீரே - ஏற்றங்கொள
கைகொடுப்போம் கருத்துடனே காத்துநிற்போம் கவலைகொளா
வையகமே வாழ்த்தும்வகை யாய்.

மாற்றுத்திற னாளிகள் மண்மேற்பாவப் பிறப்பென்று
கூற்றுக்க ளுலவுகின்ற காலமதில் - ஏற்றம்பெறும்
எழிலான சிந்தனைக ளெழுச்சிபெற வேண்டுமிங்கே
வளமா யிவா்வாழ வழிகள்.

**நடராசா இராமநாதன்**
உடையாா்கட்டு.
முல்லைத்தீவு.

# பொதுமைப் பொறிமுறை

இலங்கையில் இலவசக் கல்வி முறைமை அறிமுகப் படுத்தப்பட்டதன் விளைவாக எழுத்தறிவு வீதம் அதிகரித்த தோடு மட்டுமன்றி சமூக அபிவிருத்திச் சுட்டியும் ஆரோக்கிய மானதளத்தில் நிலை பெறுவதற்கு வாய்ப்புக் கிட்டியது. இதே போன்றே விசேட கல்வித் திட்டத்தின் அறிமுகத்தின் பயனாக அனைவருக்கும் கல்வி மற்றும் சம வாய்ப்பு என்கின்ற இலக்கு அண்மித்ததாக்கப்பட்டிருக்கின்றது.

ஏதோ ஒரு வகையில் கல்வி முறைமை ஒன்றின் ஊடாக வலுவிழந்தவர்கள் உள்வாங்கப்படுவதன் மூலம் சமூக இயங்கு நிலையின் இயல்புத்தன்மை மேலும் மெருகு பெறும் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை. விசேட கல்வித் துறையின் வெற்றி என்பது பெரும்பாலும் ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் விசேட தேவை உள்ள பிள்ளைகளின தும் கூட்டிணைவினாலேயே சாத்தியமாக்கப்படுகிறது. குறித்த தளங்களில் யாதெனும் ஓர் இடத்தில் தளர்ச்சி நிலை காணப் படுகின்ற போது விசேட கல்வித்திட்ட முறைமை தோல்வி யுறுவதற்கான ஏது நிலை உண்டு.

வேலை வாய்ப்பை மையப்படுத்தியதாக விசேட கல் வித்துறையை ஒருவர் தேர்வு செய்வாராயின் அங்கு அர்ப்ப ணிப்பு என்கின்ற விடயம் அடிபட்டு போகின்றது. அதே வேளை அர்ப்பணிப்புள்ள விசேட கல்வித்துறை சார்ந்த ஆசிரி யரின் சேவையினை பெற்றோர்கள் துஸ்பிரயோகிக்கும் போது அல்லது முறையாக பயன்படுத்தாது விடுகின்ற போது ஆசிரியர் சோர்வுறுவதற்கான வாய்ப்பு உண்டு.

உதாரணமாக

விசேட தேவையுடைய ஒரு பிள்ளையை பாடசாலை யில் விட்டுச் செல்கின்ற பெற்றோர்கள் தொடர்ச்சியாக பாட வேளைகள் நிறைவுற்ற பின்னரும் தாமதித்து தமது பிள்ளை களை மீளழைத்துச் செல்கின்ற நிலை காணப்படுமாயின் ஆசிரியர்கள் சலிப்புறுவது தவிர்க்க முடியாததாகிறது. இவ்வாறே பொருத்தமான தலையீட்டு நுட்பங்களை பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகள் மட்டில் பிரயோ கிக்கத் தவறுகின்றபோதும் பிள்ளைகள் விசேட கல்வித் துறை யில் இருந்து விலகல் அடைவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

எனவே நாம் அனைவரும் கூட்டொருமித்து ஒரு பொதுவான பொறிமுறையூடாக விசேட கல்வித்துறையை பயன்படுத்துகின்ற போது மேலும் வினைத்திறனான பயன் கிட்டும்.

**திரு. க. தர்மசேகரம்**
பிரதம ஆசிரியர்




## வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

# அசாதாரண புருஷர்கள்...

## இல்லையென்றால் விடுவேனா?

ஏ.ஜே. ஞானேந்திரன்

"இல்லாமை என்பது எவருக்குமே வரக்கூடாத ஒன்று. இல்லாமை தொடராக பல இல்லாமைகளைத் தருகின்றது. இந்த இல்லாமையை எல்லோருமே ஒரே வடிவில் நோக்குவதில்லை. முயலாமைதான் இந்தத் தோல்விகளுக்கெல்லாம் காரணம். அவர்கள் உள்மனது கூக்குரலிட,இந்த இல்லாமையிலும் வெற்றி தேவதையை ஆரத் தழுவி அரவணைத்துக் கொள்கிறார்கள். ...."

தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் அது தரத்தினில் குறைவதுண்டோ.. என்று பாடும் மாற்றுத் திறனாளிகளை அசாதாரண புருஷர்கள் என்றே நான் விளிக்க ஆசைப்படுகின்றேன். இல்லாமையில், தம் இயலுமையை வெளிப்படுத்துபவர்கள் இவர்கள்...மார்லா றுன்யான் Marla Runyan என்ற பெண்ணை நெருங்குவோம்.யார் இந்தப் பெண் மார்லா? ஒரு ஓட்ட வீராங்கனை வாழ்க்கையில் விரட்டுப்பட்டு ஓடி ஒதுங்கியவரல்ல. Stargardt disease என்ற விசித்திரமான ஒரு நோயால் கண்கள் தாக்கப்பட்டவர் இவர். பார்வைக் கோளாறை ஏற்படுத்தும் இந்த நோயைக் குணப்படுத்த, மருத்துவ உலகம் இன்றுவரையில் எந்த மருந்தையும் கண்டுபிடிக்கவில்லை என்பது ஜீரணிக்க முடியாத ஒரு நிஜம்.

அசாதாரண புருஷர் என்ற பட்டியலில் இடப்பட்ட இவரின் கண்தான் தன் செயற்பாட்டை இழந்ததேயொழிய, ஏனைய உடல் உறுப்புகள் இதைச் சாக்காக வைத்து சோம்பிக்கிடக்க தயாராக இல்லை. வலுவிழந்தோருக்கான 1992 ஒலிம்பிக்போட்டியில், ஒன்றல்ல இரண்டல்ல 5 தங்கப் பதக்கங்களை வென்றெடுத்தார் இந்தத் தடகள வீராங்கனை. இந்தப் போட்டிகள் பார்சலோனா நகரில் இடம்பெற்றிருந்தன. 2000மாவது ஆண்டில், முதன் முதலாக ஒரு கோடைகால ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளும் ஒரு வலுவிழந்த ஒரு பெண் வீராங்கனை என்ற பெருமை அந்த ஆண்டில் இவருக்குக் கிடைத்தது. 2002இல் 1500 மீற்றர் தூர ஓட்டப் பந்தயங்கள் மூன்றில் இவர் முதலிடத்தைச் சுவீ கரித்ததுடன் , அதே ஆண்டில் 5000மீ. ஓட்டப் போட்டியிலும், மரதன் ஓட்டப்போட்டியிலும் முதலிடங்களை தனதாக்கிக்கொண்டார் இந்த அமெரிக்க தடகள வீராங்கனை!

இலக்கிய உலகிலும் இவர் தடம் பதித்திருக்கிறார் என்பது இன்னொரு அற்புதமான விடயம். "No Finish Line: My Life as I See It"

என்பது இவர் கைபட எழுதிய ஒரு நூல் . தன் வாழக்கையின் பல்வேறுபட்ட சம்பவங்க ளின் கோர்வையை ஒரு நூல்வடிவில் கொண்டுவந்திருக்கிறார். தனக்கு 9வயதி லேயே கண்ணில் கோளாறு தொடங்கி விட்டது என்றுகூறும் இவர் , அன்றிலிருந்து இன்றுவரையிலான தன் வாழ்வின் எதிர் நீச்சலையே இந்த நூலில் விபரித்துள்ளார். தனக்கு கண்பார்வையில் தாக்கம் வந்த போதிலும், பெற்றோரின் தளராத அரவ ணைப்பும், இவர் விடாப்பிடியாக தன் சிறு வயதுக் கனவுகளைத் துரத்திக் கொண்டு ஓடியதும், இவரது கனவுகள் நனவாக பாதை வகுத்துக் கொடுத்திருக்கின்றன. வயலின் வாசிக்கக் கற்றுக் கொண்டார். குதிரையேற் றம் பொழுதுபோக்காயிற்று. இந்த வழியில் சென்றவர் தனக்கு தடகள ஓட்டப் பந்தயங் களில் வெல்வது, இறைவன் கொடுத்த கொடை என்பதை உணர்ந்து கொண்டார். 200மீற்றர் ஓட்டப் போட்டி, உயரப் பாய்தல், 800மீற்றர் ஓட்டப் போட்டி என்று பல தடகளப் போட்டிகளில் இவர் பங்குபற்றி வந்துள்ளார். 7 பிரிவுகளைக் கொண்ட வேறுபட்ட ஓட்டப் பந்தயங்களைக் கொண்ட heptathlon மிகவும் சிரமமான ஒன்று என்பதில் சந்தேகமே இல்லை.

"மனிதராய்ப் பிறந்த எவருமே ஏதோ வொரு விதத்தில், இயலாமையோடு இருப்ப வர்தான். அது உடல்ரீதியானதாகவும் இருக் கலாம். உளரீதியானதாகவும் இருக்கலாம்"- என்று ஒரு பெரிய உண்மையை தன் நூலில் இவர் கோடிட்டுக் காட்டுகின்றார். ஒரு வர் தன் முழு அர்ப்பணிப்பு, முயற்சி, செய்வதில் அளவு கடந்த ஈடுபாட்டைக் காண் பித்தல் - அதாவது வேட்கை, சுயநம்பிக்கை போன்றன இருந்தால் எவரும் எதையும் சாதிக்கலாம் என்கின்றார் இவர். இப்படி யொரு நிலையில், ஆரம்பத்தில் கடினமாகத் தெரிவது எதுவுமே பின்னர் இலகுவானதாக மாற்றம் பெற்று விடும்.

தான் பெற்ற இன்பம் வையகம் பெறுக என்பதுபோல், இவர் தான் பெற்ற அறிவை, அனுபவத்தை தன்னுடனேயே வைத்திருக்கும் சுயநலவாதியாக மாறிவிட வில்லை. தன் சமுதாயத்தில் தன்னைப் போன்று வலுக்குறைந்தோருக்கு இவர் ஒரு ஆசிரியராக, ஆலோசகராக, செயற்பட்டு வந்தி ருக்கிறார் என்பது இவருக்குப் பெருமை தேடித் தரும் விடயம்.

இவர் சுயசரிதையைச் சொல்லும் இந்த நூல் 2002இல் வெளியாகி இருக் கின்றது. என்பார்வையில் என் வாழ்வு.... என்ற தலைப்போடு ஓட்டப் பந்தயங்களுக்கு முடிவு கோடு வரலாம். ஆனால் என் வாழக் கையில் அல்ல என்பதையும் தலைப்போடு சுருக்கமாக இணைத்துள்ளார். சலி ஜென் கின்ஸ் என்பவரே இவரது கதையை உலகுக் குச் சொல்ல உதவியிருக்கிறார். "இவர் பார் வையிழந்தவரா? இல்லவே இல்லை. நல்ல கண்பார்வை உள்ளவரால் பார்ப்பதை விட இவரால் அதிகமாகப் பார்க்க முடியும் என்று சொல்லி வியக்கின்றார் இவர். வலுவிழந்த ஒருவர், சாதாரண மனிதர் ஒருவரோடு போட் டிகளில் கலந்து கொள்வதிலிருந்தே, அவரது தன்னம்பிக்கையை, மனோ தைரியத்தை ஒருவரால் கண்டறிந்து விட முடியும்.

பார்வை ஒன்றே போதுமா...? என்ற சினிமாப் பாடலின் முதல்வரிதான் ஞாபகத் திற்கு வருகின்றது. அதே சமயம் ஒரு புதுக்கவிதை வரிகளையும் இங்கே இணைக் கிறேன்...

**தன்னம்பிக்கை....**

துளைக்கப் பட்டோமென்று
துவளவில்லை மூங்கில்கள்!
மாலையில் வீழ்வோமென்று
மலராமல் இல்லைமலர்கள்!
வீழ்ந்து விட்டோமென்று
விருட்சம் ஆகாமலில்லை விதைகள்!
சிதைக்கப் பட்டோமென்று
சிலைகள் ஆகாமலில்லை
பாறைகள்!

# வலைவெளி

(கடந்த இதழ் 22இன் தொடர்ச்சி)

# பத்தியமும், ஒவ்வாமையும்

# ஆட்டிசம்


பாலபாரதி

பொதுவாகவே ஆட்டிசம் பாதிப்புக்குள்ளான குழந்தைகளுக்கு சில பத்திய முறைகளை பலரும் சொல்லி வருகிறார்கள். அதே போல. ஒவ்வாமை என்பதும் இக் குழந்தைகள் சந்திக்கும் பெரிய சவால்களில் ஒன்று. அவற்றைப் பற்றி சிறு அறிமுகத்தை எளிமையாக கொடுக்க முயன்றிருக்கிறேன். சில ஆய்வாளர்கள் ஆட்டிசத்திற்கும் ஜீரணக் கோளாறுகளுக்குமான தொடர்புகளை ஆய்ந்து வருகிறார்கள். க்ளூட்டின் (gluten) மற்றும் கேசின் (cascin) எனப்படும் இரு வகைப் புரோட்டீன்களை ஜீரணிக்க சிரமப் படும் இவர்களின் குடல் அப்புரோட்டீன்களை சரியாக ஜீரணமாகாத நிலையில் ரத்தத்தில் கலக்க விடுவதால் அது மூளையை பாதிக் கிறது என்பது ஒரு சாராரின் வாதம். இது எல்லாத் தரப்பு ஆராய்ச்சியாளர்களாலும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப் படவில்லை. ஆனால் நிறைய பெற்றோர்கள் இவ்வகை டயட்டின் பின் தங்கள் குழந்தைகளின் நட வடிக்கைகளில் பெரும் மாற்றம் இருப்பதாகக் கூறுகின்றனர்.

க்ளூட்டின் என்பது கோதுமை, பார்லி போன்ற தானியங்களில் காணப்படும் ஒரு வகை புரோட்டீன். கோதுமையை வாயில் வைத்து மென்று இருக்கிறீர்களா? சவ்வு மிட்டாய் மாதிரி ஒரு பதம் வருமே. அப்படி ஆன நிலையில் வெளிப்படுவது தான் க்ளூட்டின் என்று சொல்லப்படுகிறது.

கேசின் என்பது பால் மற்றும் அது சார்ந்த பொருட்களில் இருக்கும் புரோட்டீன் வகையாகும். பால் தன் நிலையில் இருந்து மாறும் நிலையில் கேசின் உற்பத்தி ஆகிறது. இந்த புரோட்டீன்கள்முதலில் பெரிய உருவி லான பெப்ரைட்டுகளாகவும் பின்னர் சிறிய உருவிலான அமினோ அமிலங்களாகவும் உடைக்கப்பட்டு ஜீரணிக்கப்படுவது வழக்கம். ஆனால் சில ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் இக்குறைபாடு உடைய குழந்தைக ளின் சிறுநீரைப் பரிசோதித்துப் பார்த்ததில் பெப்ரைட் உருவிலேயே புரதங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த பெப்ரைட் டுகள் ஒரு வகையில் அபினின் தன்மையைக் கொண்டவை. எனவே ஒரு போதைப் பொருள் போல இவை ரத்தத்தில் கலந்து குழந்தைகளின் மூளையை பாதிப்பதன் விளைவே ஆட்டிசக் குழந்தைகளில் காணப் படும் விரும்பத்தகாத நடவடிக்கைகள் என்பது இவ்வாய்வாளர்களின் கூற்று. ஆட்டிசம் மட்டு மல்ல ஸ்கீசோபிரினியா (schizophrenia) போன்ற வியாதிகளுக்கும் இந்த முழுமை யாக ஜீரணிக்கப்படாத புரோட்டீன்களே காரணமாக இருக்கக்கூடும் என்றும் சொல்கி றார்கள்.

ஆனால் எல்லா ஆட்டிசக் குழந்தை களுக்கும் இந்த தீர்வு ஒத்து வருவதில்லை. நாம் முன்பே பார்த்தது போல எந்த ஒரு குழந் தைக்கும் ஆட்டிசம் ஏற்படுவதின் காரணம் இன்னதால் என்பதைத் திட்டவட்டமாகக் கண்டு பிடித்துவிட முடிவதில்லை. அக்குழந் தையின் ஆட்டிசத்திற்கான அடிப்படைக்




காரணி இவ்வகை ஜீரணக் குறைபாடாக இருக்கும் பட்சத்தில், இந்த டயட் அவர்களிடம் பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும். அப்படியில் லாது வேறேதேனும் காரணங் களால் அக் குறைபாடு ஏற்பட்டிருப்பின் இந்த டயட்டினால் எந்த முன்னேற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது.

எது எப்படியிருந்தாலும் ஆட்டிசக் குழந்தைகளில் பெரும்பாலானோருக்கு ஜீரணக்குறைபாடுகள் அதிகமாகக் காணப் படுவதும், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதும் உண்மையே. உதாரணமாக ஆட்டிசக் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட சாத்தியக்கூறுகள் சாதாரணக் குழந் தையை விட அதிகம் என்று ஆய்வொன்று நிறுவுகிறது. இந்த GFCF டயட் நிச்சயமாக அந்த ஜீரணப்பிரச்சனைகளைக் குறைக் கிறது.

ஒரு சில குழந்தைகளுக்கு இது நம்பமுடியாத அளவுக்கு நல்ல பலன்களைத் தருகிறது - நடவடிக்கைகளில் விரும்பத்தக்க மாற்றம் நிகழ்ந்துள்ளதாகவும், பேசாத சில குழந்தைகள் பேசத்தொடங்கியதாகவும் அக் குழந்தைகளின் பெற்றோர் கூறிய கருத்துக் கள் காணக்கிடைக்கின்றன. ஆனால் இந்த முன்னேற்றங்கள் உடனடியாக வெளித் தெரி வதில்லை. மனித உடலிலிருந்து மறைய பால் சம்பந்தப்பட்ட கேசினுக்கு சில வாரங் களும், கோதுமை சம்பந்தப்பட்ட க்ளூாட்டி னுக்கு சில மாதங்களும் தேவைப்படும். எனவே குறைந்தபட்சம் 6 மாதம் முதல் ஒரு வருடம் வரை இதை முயற்சித்துப் பார்த்தால் மட்டுமே நாம் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வர முடியும் என்றும் சொல்லப்படுகிறது.

**நம்பிக்கை தேவை**

நம் சமூகத்தில் பால் என்பது குழந் தைக்கான முழு முதல் உணவாக கருத்தப் படுகிறது. குழந்தை சாப்பிட பிடிவாதப்படுத்தி னாலும் மல்லுகட்டி ஒரு டம்ப்ளர் பாலையா வது உள்ளே அனுப்புவது நம் குடும்பங்களில் வழக்கம். அதே போல் பிஸ்கெட்டுக்கு நிக ரான சத்தான நொறுவைத் தீனி வேறெதும் இல்லையென்பதும் நம் ஆழ்ந்த நம்பிக்கை. எனவே இவ்விரண்டும் தவிர்த்த உணவுகள் மட்டுமே குழந்தைக்கு என்பது முதலில் கொஞ்சம் கடினமாகத் தான் இருக்கும்.

ஆனால் யோசித்துப் பார்த்தால் மனிதனைத் தவிர வேறு எந்த உயிரினமும் தன் இனமல்லாத உயிரின் பாலை உண்டு ஜீவிப்பதில்லை. எனவே மாட்டின் பாலை அருந்த முடியாமல் போவதாலேயே குழந்தை பெரிதாக எதையோ இழந்து விட்டதைப் போல் நினைத்து பயப்படத் தேவையில்லை. அமெ ரிக்காவின் வீகன்ஸ்(VEGAN) குழுவினர் பால், முட்டை கூட கலக்காத அதி தீவிர சைவ பட்சிணிகளாக வாழ்கிறார்கள். அவர்களது குழந்தைகள் எல்லாம் பால் இல்லாமலே கூட தேவையான கால்சியத்தோடு நல்ல உடல் நலத்தோடு வளரவே செய்கிறார்கள். ராகி போன்ற தானியங்கள், பீன்ஸ், ப்ரோக்கோலி போன்ற பச்சைக் காய்கறிகள் என மற்ற கால் சியம் மிக்க உணவு வகைகளைக் கொண்டே குழந்தைகளை நல்ல வலுவோடும், ஆரோக் கியத்தோடும் வளர்க்க முடியும் என்ற நம் பிக்கை கொள்ள வேண்டும்.

**நம் பாரம்பரிய உணவு**

இணையத்தில் மேலோட்டமாகத் தேடினாலே கூட பாலும், கோதுமையையும் தவிர்த்த நிறைய சமையற்குறிப்புகள் கிடைக்கின்றன. மேலும் நம்முடைய பாரம்பரிய நொறுவைகளான முறுக்கு, தட்டை, சீடை என அரிசி மாவையும், கடலை மாவையும் அடிப்படையாகக் கொண்ட எத்தனையோ பலகாரங்கள் உண்டு.

பாலுக்கு மாற்றாக, சோயா பால், முளை கட்டிய தானியங்கள் கொண்டு செய்யும் சுண்டல், சர்க்கரையில் இருக்கும் க்ளுக்கோஸின் அளவு இக்குழந்தைகளை மேலும் தூண்டி விடும் என்பதால், கருப்பட்டி சேர்த்த சத்துமாவுக் கஞ்சி என மாற்று ஏற்பாடுகளின் மூலம் குழந்தைகளின் சுவையையும் அதே நேரம் ஆரோக்கியத்தையும் காத்துக் கொள்ள முடியும்.

**ஆலோசனை அவசியம்**

எனினும் இந்த டயட்டை தொடங்குவதற்கு முன்னர் தங்கள் குழந்தையின் மருத்துவர் (pediatrician), மற்றும் இத்துறை சார்ந்தவர்களை ஒருமுறை கலந்து பேசிவிட்டு இதை செயல்படுத்துதல் நலம். மேலும் செயற்கை நிறமூட்டும் பதார்த் தங்கள், சுவையூட்டும் பதார்த்தங்கள், சர்க் கரை, பிரிசர்வேட்டிவ்ஸ்(நீண்ட நாள் கெட்டுப் போகாமலிருக்க உபயோகிக்கப்படும் வேதிப் பொருட்கள்) மற்றும் இனிப்பூட்டும் பதார்த் தங்கள் போன்றவற்றையும் இக்குழந்தைகளுக்கு தவிர்த்தல் நலம்.

## SCD – Diet


இதே போல எஸ்.சி.டி(SCD – Specific Carbohydrate Diet) என்றொரு டயட் முறையும் உள்ளது. க்ளூட்டின், கேசின் போன்ற புரதங்களைப் போலவே ஒரு சில கார்போஹைட்ரேட்களையும் ஜீரணிப்பதில் சிரமங்கள் ஏற்படலாம் என்றும், அவற்றைத் தவிர்ப்பது நல்லது என்பதுமே இந்த டயட்டின் கொள்கையாகும். உண்மையில் முதன்மையாக இது ஜீரணக் கோளாறுகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு டயட் முறைதான். சிலர் இது ஆட்டிசத்திற்கும் பலனளிப்பதாகச் சொன்னாலும் பரவலாக அறியப்படாத ஒரு முறையாகவே இது உள்ளது.

**வேதிப்பொருட்கள் - ஒவ்வாமை**

உணவுப் பொருட்களைப் போலவே சுற்றுச்சூழலில் காணப்படும் வேதிப்பொருட்களும் ஆட்டிசக் குழந்தைகளுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தி அவர்களின் நடவடிக்கைகளை பாதிக்கலாம். எனவே சூழலில் கையாளப்படும் வேதிப்பொருட்கள் (chemicals) குறித்தும் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

வீட்டிற்கு வண்ணமடிக்கப் பயன்படும் பெயிண்ட்கள், துப்புரவுக்குப் பயன்படுத்தும் திரவங்கள் (பாத்திரம் தேய்க்க, வீடு துடைக்க பயன்படுத்துபவை), அலுமினியம் போன்ற சிலவகை கனஉலோகங்கள், நொதித்தலுக்குப் பயன்படுத்தப்படும் ஈஸ்ட் போன்ற பொருட்கள் இக்குழந்தைகள் புழங்குமிடத்தில் இருந்தாலே அவை இக்குழந்தைகளுக்கு ஒவ்வாமையை உருவாக்க முடியும் என்று ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். எனவே இத்தகைய பொருட்களையும் நமது இல்லங்களில் குழந்தைகள் புழங்கும் இடங்களில் வைக்காமலிருப்பது நல்லது.

(தொடரும்)



யோதிடர்: V.A.சிவராசா

# திருமணக் கிரியைகள்

- விவாகம் என்பதற்கு "சுமப்பது" எனப் பொருள்படும். மனைவிக்குத் துன்பம் நேராவண்ணம் காப்பது எனப்பொருள் படும்.
- வாக்தானம்: மணப்பெண்ணைப் பார்த்து தர்மத்தைச் செய்வதற்காக உன்னை ஏற்கிறேன்.
- நிச்சியதார்த்தம்: திருமணத்தை நிச்சயித்து விட்டு மாப்பிள்ளை வீட்டிற்கு பெண் வீட்டாரும், பெண்வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டாரும் சென்று தாம்பூலம் மாற்றுதல்.
- மாங்கலியம் (தாலி) செய்வதற்கு நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளை வீட்டில் அல்லது ஆசாரியார் வீட்டில் பொன்னுருக்கல் செய்யப்படும்.
- தாலி என்ற சமஸ்கிருதச்சொல் பனை மரத்தைக் குறிக்கும் "தால" என்பது பனை ஓலையைக் குறிக்கும். பழைய காலத்தில் தங்கத்திற்குப் பதிலாக பனை ஓலையைப் பயன்படுத்தினர். ஆதி காலத்தில் மஞ்சள் கயிற்றினாலே தான் தாலி கட்டப்பட்டு வந்தது.
- தாலி கட்டும் போது கூறப்படும் மந்திரத்தின் தமிழாக்கம் "யான் கட்டும் தாலி நான் வாழ்வதற்கு ஏதுவானது. இதை உன் கழுத்தில் கட்டுகிறேன் சௌ பாக்கியவாதியாக நீ நூறு வருடங்கள் சுகமாக வாழ்ந்திருப்பாயாக"
- மாங்கல்யம் ஒன்பது இழைகளைக் கொண்டது.
  வாழ்க்கையை உள்ளபடி புரிந்து கொள்ளுதல்,
  ஆற்றல்,
  தெய்வீக நோக்கம்,
  விவேகம்,
  தொண்டு,
  மேன்மை,
  தூய்மை,
  உத்தம குணங்கள்,
  தன்னடக்கம்,
- தாலியில் மூன்று முடிச்சுக்கள், இடம்பெறும்.
  கணவனுக்கு கட்டுப்பட்டவள்,
- கணவனின் பெற்றோருக்கு கட்டுப் பட்டவள்,
- தெய்வத்திற்கு கட்டுப்பட்டவள்.
  கன்னிக்கால்: மணமக்கள் வீட்டில் தனித் தனியே வடகிழக்கு மூலையில் முகூர்த்தக் கால் (கன்னிக்கால்) ஊன்ற வேணடும். கன்னிக்காலுக்கு முள்முருங்கை மரமே பயன் படுத்த வேண்டும்.
- முள்முருக்கு நடப்படுதல்: கற்பு நெறி தவறாமல் வாழ வேண்டும் என்பதற்காக.
- அங்குராப்பணம்: எனப்படுவது நவதானிய முளையிடுதல் ஆகும். இதன் பொருள் தம்பதிகள் செழிப்பாக வாழ வேண்டும் என்பதேயாகும்.



- காப்பு கட்டுதல் (இரட்சாபந்தனம்) என்பதன் பொருள் எடுத்த கருமங்கள் இடையூறின்றி நிறைவேறுதலாகும்.
- ஆசிர்வாதம்: குடும்ப வாழ்வு தவறின்றி நடப்பதற்கு "பிதுரர்" ஆசீர்வாதம் வேண்டப்படும்.
- கன்னிகாதானம்: மண மகளின் பிதா மணமகனுக்கு பெண்ணைக் கொடுத்தலாகும்.
- கெட்டிமேளம்: தாலி கட்டும் போது அமங்கல வார்த்தைகள், தும்மல் போன்ற துர்சகுன ஒலிகள் கேட்கக் கூடாது என்பதற்காக கெட்டிமேளம் கொட்டப்படும்.
- மாலை மாற்றுதல்: வாழ்க்கையில் உடலாலும் ,உள்ளத்தாலும் நாம் இருவரும் ஒருவரே என்ற கருத்துப்பட்ட மூன்று முறை மாலை மாற்றுதல்
- பாணிக்கிரகணம்பிடித்தல்: நீயும் நானும் முதுமையடைந்து விட்டாலும் கூட ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருப்போம் என்று உன்கையைப் பிடிக்கிறேன்.
- ஏழடி நடத்தல்,
  கடவுளுக்காக,
  கணவனுக்காக,
  சேர்ந்தோர் குலத்தைக் காக்க,
  அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் குணநலன்களைப் பேண,
  இருவரது அறிவு நல்வழியாக அமைய,
  கலைகள் யாவும் கணவனுக்கப் பொருந்தும் வரை ஊட்ட,
  ஏழேழு பிறப்பும் கணவருடன் இன்புற்று வாழ,
- அம்மி மிதித்தல்: கற்பையும் ஒழுக்கத்தையும் உறுதியாய் பேணிக் காப்பதற்கு,
- மெட்டி அணிதல்: தீய ஆவிகள் மணமகளைத் தீண்டாதிருத்தல்.
- மோதிரம் போட்டு எடுத்தல்: மணமக்களுக்கு கூச்சம் தெளியவும், ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுக்கவும்.
- வாழ்த்துதல்: அறுகைச்சேர்த்து மஞ்சள் கலந்த அரிசியுடன் மணமக்களின் உச்சியில் மூன்று முறை இடுதல்.
- "ஆரத்தி: திருமண நிகழ்வின் நிறைவாக "ஆரத்தி" எடுத்தல் நிகழும்.

# செய்திச் சாரம்

## கருவியின் ஆண்டுவிழா

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் ஆறாம் ஆண்டு நிறைவு விழா 12.6.2019 அன்று கருவி நிறுவனத்தில் இடம்பெற்றது. கருவியின் தலைவர் திரு.க.தர்மசேகரம் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுற்றுலாத்துறை தலைவர் பேராசிரியர் த.தேவராஜா அவர்களும், சிறப்பு விருந்தினராக கோண்டாவில் இராமகிருஸ்ணா வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் திரு S.வாமதேவன் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்நிகழ்விற்கான ஆசிச் செய்தியினை உளவியலாளர் அருட்தந்தை S.A. இராஜநாயகம் அவர்கள் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் அங்கத்தவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள், ஆடைகள் என்பனவற்றுடன் மதிய போசனமும் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் கருவியின் ஆண்டு விழா சிறப்பு மலராக வெளிவந்த வலு இதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கான வரவேற்புரையினை செயலாளர் திரு.து.யசிந்தன் அவர்களும், நன்றியுரையினை உபசெயலாளர் திரு.நா.கீதாகிருஸ்ணன் அவர்களும் வழங்கியிருந்தனர்.

## யுத்தம் நடந்த பிரதேசங்களில் வாழ்ந்தவர்களின் 20 வீதமானோர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்!

ஐக்கிய நாடுகள் சபையால் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் முடிவுகள் யுத்தம் இடம் பெற்ற பகுதியில் வாழ்ந்த மக்களில் ஐந்தில் ஒரு வீதமானோருக்கு மனநோய் உள்ளதாக தெரிவிக்கின்றது. போர்காலங்களில் அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களின் மனநிலை தொடர்பாக உலக சுகாதார நிறுவனத்தின் மனநல மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் பணியாற்றும் மார்க் வேன் ஓமர்மேன் என்பவர் மேற்கொண்ட ஆய்விலிருந்து இது தெரிய வந்துள்ளது. மார்க் இவ் ஆய்வுக்காக ஒரு குழுவை உருவாக்கினார். அதனூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இதனூடாக இவர்களுக்கு உதவிகள் வழங்கவும் இவர்களின் நலனை மேம்படுத்தவும் உதவ முடிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வில் ஆண்களை விட பெண்களே அதிகளவில் மனஅழுத்தத்திற்கு உள்ளாகி இருப்பது தெரிய வந்துள்ளது. போர்ப் பாதிப்பு மற்றும் மருத்துவ நெருக்கடிகள் என்பன இந் நோய்த் தாக்கத்திற்கு காரணமாக அமைந்துள்ளன.




## 01. இலக்கியம்


### இராமர் கதை

(கடந்த இதழ் 22 இன் தொடர்ச்சி...)

பின்னர் மூவரும் மிதிலை நகரை அடைந்த போது அங்கிருந்த கொடிகள் இவர்களை வரவேற்றது. மிதிலை நகர்வீதியில் அம்மூவரும் சென்றுகொண்டிருந்தபோது கன்னிமாடம் அவர்கள் கண்களுக்கு காட்சியளித்தது. அங்கே ஜனக மகாராஜனின் புத்திரியான ஜானகி நின்றாள். முனிவருக்குப் பின்னால் தன் தம்பியோடு நடந்து வரும் இராமன் அந்த அழகிய பெண்ணைப் பார்க்கிறான். அதே கணத்தில் அந்தப் பெண்ணும் அழகும் கம்பீரமுமாக வந்து கொண்டிருக்கும் இராமனைப் பார்க்கிறாள். பார்க்கின்ற அவர்களது கண்கள் ஒன்றோ டொன்று சங்கமமாகின்றன. அவர்களது உணர்வுகளும் ஒன்றாகி விடுகின்றன. இக் காட்சியினை

"எண்ணரும் நலத்தினாள் இனையன் நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது. உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்!
அவளும் நோக்கினாள்." என்ற பாடலூடாக கம்பர் மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார்.

சீதையைப் பார்த்தவாறே இராமர் அவ்வீதி வழியே நடந்து செல்கின்றார். அதே கணம் இராமரைப் பார்த்தவாறே சீதை கன்னிமாடத்தில் நிற்கின்றாள். இருவரும் மறையும் வரை பார்க்கின்றனர். மறைந்த பின்னரும் அவர்கள் மனங்களில் அக்காட்சி மறையவில்லை. பொழுதும் மறைந்து இருளும் வந்து சேர்கிறது. முனிவரும் இராம இலக்குமணனும் ஜனக மகாராஜனின் அரண்மனையை அடைகின்றனர். இவர்களைக் கண்ட ஜனகன் மனம் மிக மகிழ்ந்து இவர்களை வரவேற்று உபசரித்து. ஓர் மாளிகையில் தங்க வைத்தான். இவர்கள் வந்திருக்கும் செய்தி அறிந்த சதானந்த முனிவர் அங்கே வருகின்றார். இம்முனிவர் கௌதம முனிவருக்கும் அகலிகைக்கும் பிறந்தவர் ஆவார். இவர் ஜனக மகாராஜா குடும்பத்து புரோகிதர். இராமனும் இலக்குவனும் சதானந்த முனிவரை வணங்கி ஆசிபெற்றனர். விஸ்வாமித்திர முனிவரைப் பார்த்து உங்களின் வருகை இந்நாட்டின் நற்பயன் என்றார் சதனாந்த முனிவர். அவருக்கு இராம இலக்குவனைப் பற்றி எடுத்துரைத்தார் விஸ்வாமித்திர முனிவர். சதானந்தர் இராமனைப் பார்த்து "குழந்தாய்! இந்த விஸ்வாமித்திர முனிவர் அரச குலத்திலே உதித்தவர். ராஜ நீதியிலும் போர்ப்பயிற்சியிலும் வல்லவர். பிறகு பெருந்தவம் செய்து பெரும் புகழ் பெற்றவர் என்றார்.



அன்றைய இரவுப்பொழுது இராமருக்கும் சீதைக்கும் உறக்கமில்லாத ஒரு நீண்ட பொழு தானது. பொழுது விடிந்ததும். இராமர் எழுந்து உற்சாகத்தோடு தன் தம்பியும் உடன்வர முனிவரோடு யாகசாலை சென்றடைந்தான். சபா மண்டபத்தில் ஜனக மகாராஜா அருகில் இம்மூவரும் அமர்ந்தனர். முனிவரே! இந்தக் குமாரர்கள் யார்?" என்று ஜனகன் கேட்க, அதற்கு விசுவாமித்திரர் இவர்கள் தசரத குமா ரர்கள். வேள்வி காண வந்தனர். அப்படியே உன் வில்லாகியாக சிவதனுசையும் பார்ப்பார் கள்" என்றார். இக் குமாரர்கள் தசரத மகாராஜ னின் குலக் குருவாகிய வசிட்ட முனிவரிடம் கலைகளையும், வேதங்களையும் பயின்று உயர்நிலை பெற்றார்கள் என்றார்.

ஜனகன் தனது பணியாளர்களுக்கு "கார் முகச் சாலை"யில் இருந்த சிவதனுசை கொண்டு வர பணித்தான். அவர்கள் அங்கு சென்று எட்டுச் சக்கரமுடைய உறுதியான இரும்புப் பேழையில் வைக்கப்பட்டிருந்த தனுசை (அறுபத்து நான்காயிரவர்) தாங்கி வந்தனர். இச்சிவ தனுசை வளைக்கும் வலிமை சிவபெருமானுக்கோ அல்லது திருமாலுக்கோ தவிர வேறு எவருக்கும் கிடையாது. திருமகள் போன்ற சீதையை மணந்து கொள்ள அந்த திருமாலே முன்வந்து இந்த தனுசை வளைத்தால் தான் திருமணம் இனிதே நிறைவேறும். இது நிகழுமோ? இப்படி ஒரு நிபந்தனையை இம்மன்னர் ஏன் விதித்தாரோ? இவனுக்குத் தன் பெண் மீது ஆசை இல்லையோ! என கூட்டத்தினர் வருந்தினர். இதுவரை ஒருவரும் வளைக்க முடியாத நிலை யில் இருந்த இத்தனுசை இப்போது ஏன் கொண்டு வர வேண்டும். யார் வந்து இப்போது இவ் வில்லை வளைத்துவிடப் போகிறார்கள் என்றும் அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்போது சதானந்த முனிவர் இந்த சிவதனுசின் வரலாற்றை இராம லக்மணர்களிடம் கூறத் தொடங்கினார்.

"ஒரு சமயம் தக்கன் பார்வதியை இகழ்ந்தமையினால் சிவபெருமான் வில்லைக் கையில் ஏந்தி கோபத்துடன் தட்சனுடைய வேள்விச்சாலையை அடைந்து, வேள்வியை அழிக்குமாறு வீரபத்திரரை ஏவினார். அவர் தேவர்களை சின்னாபின்னமாக்கி வேள்வி யையும் அழித்தார். பின்னர் கோபம் தணிந்து அவர்களையெல்லாம் உயிர்ப்பித்தார். சினம் தணிந்த பின்னும் சிவன் கையில் வில் இருப்பதைக் கண்ட தேவர்கள் அஞ்சி நடுங் கினார்கள். அப்போது சிவபெருமான் அந்த வில்லை ஜனகன் குலத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு அன்று கொடுத்தார் என்பது வரலாறு. ராமா! வில்லின் வரலாற்றை உனக்கு உரைத்தேன். இனி இந்த சீதையின் வரலாற்றைக் கூறுகிறேன் கேள்." என சதானந்தார் கூறத் தொடங் கினார். "வேள்விச்சாலை அமைக்கும் பொருட்டு ஒருநாள் ஜனகன் நிலத்தை ஏர் கொண்டு உழுத பொழுது அவ் ஏரின் கொழு முகத்தில் இப்பெண்ணரசி கிடைத்தாள். புவிமடந்தை என சீதை தோற்ற மளித்தாள். மேன்மை குணங்கள் உள்ள பிராட்டி மேன்மையான இடத்தில் மேன் மையாகவே வளர்ந்தாள். இந்தத் திருமகளை அடையவேண்டி தேவர்களும் மன்னாதி மன் னர்களும் போட்டி போட்டுக் கொண்டு வந்தார்கள். ஆயினும் சிவதனுசை வளைப்பவர்க்கே சீதையை மணமுடிப்பதாக ஜனகன் அறிவிப்பு செய்தமையால், எவராலும் இந்த தனுசை

வளைக்க முடியாததால் தோற்றுத் திரும்பினார்கள். வந்தவர்கள் சிலர் இயலாமையால் சினம் பொங்க ஜனகனுடன் போர் தொடுக்கலாயினர். ஆனால், ஜனக மகாராஜாவின் படைகள் அவர்களை தோற்கடித்து விரட்டிவிட்டனர்.

இந்நிலையில் சீதையின் திருமணம் தடைப்பட்டு விடுமோ என்று நாங்கள் ஐயப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் இராமன் வந்துள்ளான். இவன் எம் கவலைகளைத் தீர்ப்பான் என்று திடமாக நம்புகிறோம்" என்றார் சதானந்தர். இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த விஸ்வாமித்திர முனிவர் இராமனைப் பார்க்க, அவரது பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட இராமன் அந்த சிவதனுசை நோக்கி எழுந்து செல்ல தேவர்கள் ஆரவாரம் செய்தனர். அவன் எழுந்தது, நடந்தது, வில்லை எடுக்க முயன்றது, அடடா! என்ன காட்சி அது! கூடியிருந்த பெண்களும் ஏனையோரும் பெருமகிழ்ச்சி எய்தி வாழ்த்தினர். இந்தக் காட்சியைக் காண அனைவரும் இமைக்கக்கூட மறந்து பார்த்துக் கொண்டிருந்தனர். தனுசு இருக்கும் பெட்டியருகே சென்ற இராமன், அந்தத் தனுசை எடுத்தது தான் தெரியும் ஒரு பெரும் ஓசை கேட்டது. அந்த சிவதனுசு உடைந்து வீழ்ந்ததைத்தான் அனைவரும் கண்டனர். இவ்வளவும் இமைக்கும் பொழுதில் நடந்து முடிந்து விட்டது. வில் முறிந்த ஓசை உலகெங்கும் கேட்டது. மேலுலகிலும், பாதாளத்திலும் எதிரொலித்தது. விண்ணோர் பூமாரி பொழிந்தனர். கடல்கள் எல்லாம் பல்வகை இரத்தினங்களை வாரி இறைத்தன, முனிவர்கள் வாழ்த்தினர், ஜனக மன்னனோ என் நல்வினைப் பயன் தான் இன்று இந்த இராமன் உருவில் வந்தது என்று மகிழ்ந்தார். மிதிலை நகரத்து மக்கள் மகிழ்ந்தனர். நடந்த நிகழ்ச்சிகளை நேரில் கண்டவர்கள் மகிழ்ச்சியோடு மற்றவர்களுக்குச் சொல்ல ஓடினர்.

அந்தப்புரத்தில் சீதாப்பிராட்டி இராமனைக் காணும் ஆசையோடு நின்றாள். அப்போது நீலமாலை எனும் தோழி ஓடி வந்து இராமன் வில்லை முறித்துவிட்ட செய்தியைக் கூறுகிறாள். அன்று முனிவனுடனும் தம்பியுடனும் மிதிலை வந்த இராமன் தான் வில்லை முறித்தான் என்கிறாள். இதைக் கேட்ட சீதையின் மனம் அன்று கன்னி மாடத்திலிருந்து தான் பார்த்த அந்தக் கார்வண்ணனே வில்லை முறித்தனன் என்ற செய்தியை அறிந்து அளவிலா உவகை கொண்டது.

பேரு உவகை கொண்ட ஜனகன் விஸ்வாமித்திர முனிவரை நோக்கி "முனிவர் பெருமானே, இராமன் சீதை திருமணத்தை இன்றே முடித்து விடலாமா? அல்லது முறைப்படி தசரத சக்கரவர்த்தியை அழைத்து, நாடெங்கும் திருமணச் செய்தியை முரசு அறைந்து அறி வித்துவிட்டு உரியவாறு நடத்தலாமா, தங்கள் கருத்து யாது?" என்று கேட்டான். அதற்கு முனி வர் சொன்னார்: " தசரத சக்கரவர்த்திக்கு செய்தி அனுப்பி, அவரை வரவழைத்துத் திருமணம் செய்வதே முறை, நீ அப்படியே செய்" என்று சொன்னதும், ஜனகன் தூதர்களை அயோத்திக்கு அனுப்பி, இங்கே நிகழ்ந்தவற்றை தசரத சக்கரவர்த்தியிடம் கூறி, அழைத்து வரும்படி ஓலை கொடுத்து அனுப்பினான். தூதுவர்கள் அயோத்தி சென்று மன்னிடம் செய்தியைக் கூறினர். அதுகேட்ட மன்னன் மகிழ்ந்தான். முரசறைந்து நாட்டு மக்களுக்கு இராமனின் திரு மணச்செய்தியை அறிவித்தான். அவர்கள் செய்தி கேட்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். மன்னன், படைகள் சூழ, பட்டத்து இளவரசிகளுடனும் நாட்டு மக்களோடும் மிதிலை நகர் புறப்பட்டான். நான்கு நாட்கள் பயணம் செய்து, ஐந்தாம் நாள் மிதிலையை அடைந்த போது, ஜனக மகாராஜன் அவர்களை வரவேற்று அழைத்துச் சென்றான். இராம லக்குமணரும் அவருடன் வந்து தாய் தந்தை சுற்றத்தார், மக்களையும், படைகளையும் அழைத்துச் சென்றனர். ஜனகன் வந்திருந்த அனைவரையும் மிகச் சிறப்பாக உபசரித்தான். திருமண நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. திருமண நிச்சயதார்த்தம் செய்யும் பொருட்டு சீதையை மண்டபத்துக்குத் அழைத்து வருமாறு வசிட்டர் கேட்டுக் கொண்டார். இதனை ஏற்ற



ஜனகன் முறைப்படி முனி வரைத் தெழுது சீதையை அழைத்து வர கட்டளையிட்டான். உடனே சீதையின் செவிலித்தாய்கள் அவளை அலங்கரித்து அழைத்துவந்தனர். அங்கு வந்த ஜானகி அனைவரையும் வணங்கியவாறு ஜனகன் அருகில் அமர்ந்தாள். உட்கார்ந்த அவள் சிறிது கண் இமைகளைத் தூக்கித் தன்னை மணந்து கொள்ளப் போவது அன்று மாடத் திலிருந்து நான் பார்த்த அந்த கார்முகில் வர்ண்ணன்தானே என்று பார்த்தாள். ஆம்! அவனேதான் என்று ஐயம் நீங்கி ,மனம் தெளிவுற்று, மகிழ்வு எய்தினாள். தசரதன் வசிட்டரை நோக்கி "திருமண நாள் எது?" என்றார். அப்போது விஸ்வாமித்திர முனி வர் ஜனகனிடம் கேட்க, அவன் தன் குலப் பெருமையெல்லாம் சொல்லி தன் புதலல்வியரை, ராம லகக்மணருக்கும், தன் தம்பியின் புதல்விகளை பரத, சத்ருக்குனருக்கும் திருமணம் செய்ய சம்மதித்தார். இத்திருமண நிகழ்வை அடுத்த இரண்டாம் நாளான பங்குனி உத்தர நாளில் செய்ய நிச்சயம் செய்து கொண்டனர். திருமண ஆயத்தங்கள் விரைவாக நடைபெறத் தொடங்கின. ஜனகன் அனைவரையும் இனிதாக உபசரித்தான். நகர மக்கள் திருமணம் காண, தங்களை மணமக்களாய் எண்ணி, அலங்கரித்துக் கொண்டு வருகிறார்கள். திருமண நாள் அன்று, சூரியன் உதயமானான். நகர் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டிருந்தது. வாழையும், கமுகும் வழியெங்கும் கட்டப்பட்டிருந்தது. பல்லாயிர மணிகள் ஒலித்தன. ஊரெங்கும் பந்தல். விருந்துக்கான பொருட்கள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. வாழை இலை, வெற்றிலை, பழுங்கள், மலர்கள், இவை மலைபோல குவிந்தன. மிதிலை நகரம் சொர்க்கலோகம் போல ஒளிந்தது.

திருமண மண்டபத்துக்கு தசரதன் வெண்கொற்றக் குடையுடன் விரித்து, முரசுகள், மங்கல வாத்தியங்கள் முழங்க, சுற்றிலும் ஏனைய அரசர்கள் புடைசூழ சம்பந்தியாக வந்து சேர்ந்தான். மயன் அமைத்த அந்த மண்டபம் கலகலவென பற்பல ஒலிகளோடு விழாக்கோலம் பூண்டு விளங்கியது. அங்கே! இராமனுக்கு மங்கல நீராட்டி, கன்னிப் பெண்கள், வேதியர்கள் முதலா னோருக்குத் தானங்கள் கொடுக்கப்பட்டது. அலங்காரம் செய்யப்பட்ட இராமன் தோரில் ஏறி மண்டபத்தை அடைந்தான். தேவர்கள் மகிழ்ந்தனர். சீதா கல்யாணம், இராவணன் அழிவின் தொடக்கம் என்பது அவர்களுக்குத் தெரியுமல்லவா? மண்டபத்தில், வசிட்டர் தலைமையில் அக்னி வளர்க்கப்பட்டு ஹோமம் தொடங்க சடங்குகள் ஆரம்பமாயின. வேதமந்திரங்கள் முழங்க, ஜனகன் சீதாபிராட்டியின் கையைப் பிடித்து இராமபிரான் கையில் கொடுத்து நீர் வார்த்து கன்னிகாதானம் செய்வித்தான். அந்தணர் ஆசி வழங்கினர். மங்கலப் பெண்டிர் பல்லாண்டு பாடினர். மன்னர்கள் வாழ்த்தும், மக்களின் மகிழ்ச்சி ஆரவாரமும் விண்ணை முட்டின. வானவர் கற்பக மலர்களைத் தூவினர். மன்னர்கள் பொன்மலர் தூவினர். சீதையும் இராமரும் அக்னியை வலம் வந்து வணங்கினர். அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, இராமன் சீதையின் கழுத்தில் மங்கல நாண் பூட்டினான். அதே மண்டபத்தில் இலக்குவன் ஊர்மிலையையும், பரதன் மாண்டவியையும், சத்ருக்குனன் ஸ்ருதி

கீர்த்தியையும் திருமணம் செய்து கொண்டனர். திருமணச் சடங்குகள் முடிந்து அவரவர் தத்தமது இடங்களை அடைந்தனர். திருமணம் முடிந்த பின்னர் தசரதன் மிதிலையில் சில நாட்கள் தங்கி ஜனகன் மற்றும் முனிவர்கள் ஆகியோருடன் அளவளாவி மகிழ்ந்தான். விஸ்வாமித்திர முனிவர் இராமனுக்கு வேதங்களில் காணப்படும் பல ராஜ நீதிகளை உப தேசித்து, அனைவரையும் ஆசீர்வதித்து விட்டு தவம் செய்ய இமய மலைக்குச் சென்று விடு கிறார். பின்னர் தசரதன் தன் உறவினர் பரிவாரங்கள் புடைசூழ அயோத்திக்குப் புறப்பட்டுச் சென்றான். மணமக்கள் அனைவரும் அவர்களுடன் புறப்பட்டனர். அப்போது சில தீயதும் நல்லதுமான சகுணங்கள் தோன்றின. மயில்கள் இடமிருந்து வலமாகச் சென்றன. முதலில் இது நல்லது. அடுத்து காகங்கள் வலமிருந்து இடமாகச் சென்றன. இது தீயது. இதைக்கண்ட தசரதன் தயங்கி நின்றான். தசரதன் யோதிடனை அழைத்து இந்த சகுணங்களின் பலன்கள் என்ன என்று கேட்கிறான். அவன் ஆராய்து, இப்போது முதலில் ஒரு இடையூறு வரும். அது, எளிதின் நீங்கி நன்மைகள் உண்டாகும் என்று கூறினான். தசரதனும் பரிவாரங்களும் சிறிது தூரம் சென்றதும், எதிரே ஒருவன் பூமி அதிரும்படியாக கையில் கோடறியுடன் வந்து நின்றான் அவன் பெயர் பரசுராமன். இவன் ஜமதக்னி, ரேணுகாதேவிக்கு மகனாக பிறந்தான்.

இவர்களிடம் ஒரு காமதேனு இருந்தது இப்பசுவை சந்திர வம்சத்து அரசனான கார்த்த வீரியார்ச்சுனன் கவர்ந்து சென்றான். இதனால் கோபம் கொண்ட பரசுராமன் அவனைக் கொன்று அப்பசுவினை மீட்டு வந்தான். இதற்குப் பழிவாங்கும் முகமாக கார்த்தவீரயாச்சுன னின் புதல்வர்களும் பரிவாரங்களும் ஜமதாக்கினி முனிவரின் ஆச்சிரமத்திற்குச் நுழைந்து அவரை கொலை செய்தனர். இதனால் அவர் மனைவி வருந்தியதோடு தனது மார்பில் 21முறை அடித்து அலறினால். அவ்வேளை அங்கு வந்த பரசுராமன் இச்செயலைக் கண்டு கடும் சினம் கொண்டான். பின்னர் அந்த கார்த்த வீரியார்ச்சுனனின் அரண்மனைக்குச் சென்று அங்குள்ளவர்களைக் கொன்றதுடன் அந்த ஷைத்திரிய குலத்தின் 21 தலைமுறையினரை யும் அழிப்பேன் என சபதம் செய்தான். இந்த பரசுராம அவதாரம் விஸ்ணுவின் 10 அவதா ரங்களில் ஒன்று.



பரசுராமனைக் கண்ட தசரதன் கலங்கி னான். ஷைத்திரியர்களை வேரோடு களையும் இந்த பரசுராமன், தனது குமாரன் இராமனை ஏதாவது செய்துவிடுவானோ என்ற பயம் அவ னுக்கு. எதிரே வரும் இவர் யாரோ என்று எண்ணி இராமனும், பரசுராமனைப் பணிந்து வணங்கினான். ஆனால் பரசுராமனோ கோபம் தீராமல், "இராமா! பழுதுபட்ட சிவதனுசை உடைத்ததனால், நீ வீரனாகிவிட மாட்டாய். நீ வீரன் என்றால் வா, என்னோடு போரிடு" என் றான். அதற்கு தசரதன் "பெருமையுடைய பரசு ராமா! வீரம் மிகுந்த உனக்கு சாதாரண மானு டர்களாகிய நாங்கள் சமமா? இராமன் சிறுவன். அவன் உனது அடைக்கலம். இராமன் அறி யாமையால் ஏதாவது பிழை செய்திருப்பானா னால், சினம் தணிந்து சிறுவன் என்பதால்

பொருத்தருளுவாய்" என்றான். இதற்கெல்லாம் கவலைப் படாத பரசுராமன், இராமன் முறித்த சிவதனுசின் வரலாற்றைக் கூறி, அது பழுதுபட்டது என்றும், முடிந்தால் என் கையிலிருக்கும் விஸ்ணு தனுசை முறித்து இராமன் வீரனென்று நிரூபித்துக் காட்டட்டும் என்றான். இதனைக் கேட்டு இராமன் சிரித்தான்.

பரசுராமன் கையிலிருந்த விஸ்ணுதனுசை வாங்கி அதை வளைத்து, நாண் ஏற்றி, ஓர் அம்பை குறிபார்த்து, "பரசுராமரே! நீர் வேதம் உணர்ந்த பெரியோன். ஜமதக்னியின் புதல்வன். தவம் மேற்கொண்டவன். உம்மைக் கொல்லல் தகாது. ஆனால் நான் அம்பை வில்லில் பூட்டி விட்டால் அதற்கு ஓர் இலக்கு வேண்டும். சொல் இப்போதே! என் அம்புக்கு எது இலக்கு?" என்றான் இராமன். பரசுராமன் திகைத்தான். இராம பாணத்திற்கு இலக்காவது யார்? "இராமா! நீதி வடிவானவனே! என்மீது கோபப்படாதே. நீ யார் என்பதைப் புரிந்து கொண்டேன். நீயே திருமாலின் அம்சம். வேத முதல்வனே! உலகம் உன்னால் இனி இன்பமுறும். அடைக்கல மானவரைக் காக்கும் இராமா, நான் உன் அடைக்கலம்" என்று சொல்லி போற்றினான். "இராமா! உன் திறமைக்கு என் தவத்தின் பயனாய் அடந்த அனைத்து வரங்களையும் தருகிறேன்" என்று சொல்ல, இராமன் வில்லைத் தளர்த்தினான்.

பின்னர் பரசுராமன் இராமனை வாழ்த்தி வணங்கி விடைபெற்றுச் சென்றான். பரசுராமனால் இராமனுக்கு எந்த துன்பமும் ஏற்படவில்லை என்பதறிந்து தசரதன் மகிழ்ச்சியடைந்தான். வழக்கம்போல தேவர்கள் வாழ்த்தினர். பின்னர் அயோத்தி நகர் சென்ற டைந்து அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். அப்போது கேகய மன்னன் தன் பேரன் பரதனைப் பார்க்க விரும்பியதால், பரதனை சத்ருக்னனுடன் கேகய நாடு அனுப்பி வைத்தான் தசரதன்.

தொடரும்....

## 02. இலங்கை ஜனாதிபதி

(வலு 22 தொடர்ச்சி)

### இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசின் அரசியலமைப்பு

**பதவியேற்றல்32.**

(1) சனாதிபதியின் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது அப்பதவிக்கு அடுத்து பின்வரும் ஆள், இலங்கையில் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசரின் முன்னிலையில் அல்லது அந்நீதிமன்றத்தின் வேறு எவரேனும் நீதிபதியின் முன்னிலையில் நான்காம் அட்டவ ணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழே ஒப்பமிடுவதன் மேல் பதவியேற்றல் வேண்டும். அல்லது உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பிடுவதன் மேல்.

(2) அவ்வாறு பதவியேற்றதன்மேல் சனாதிபதி அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்ட அல் லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறேதேனும் பதவியை வகிக்காதொழிதல் வேண்டும் என்ப துடன், அவர் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவிருப்பின், பராளுமன்றத்தின் அவரது ஆசனத்தை வறிதாக்குதலும் வேண்டும். சனாதிபதி, எப்பதவியையேனும் எத்தகைய துமான இலாபந்தரும் பதவியையேனும் வகித்தலாகாது.

(3) சனாதிபதி, அவரது பதவியின் நிமித்தம், மூன்று மாதங்களுக்கொரு தடவை பாரளுமன் றத்துக்கு வருகை தருதல் வேண்டும். இப்பணியை நிறைவேற்றுவதில், சனாதிபதி வாக்களிப்பதற்கான உரித்துடைமையைத் தவிர பாராளுமன்ற உறுப்பினரொருவருக் குள்ள எல்லாச் சிறப்புரிமைகளுக்கும், விடுபாட்டுரிமைகளுக்கும், தத்துவங்களுக்கும்

உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், பாரளுமன்றத்தின் அல்லது அதன் உறுப்பினர்களின் ஏதேனும் சிறப்புரிமைகளினது மீறுகைக்காக ஆளாதலுமாகாது.

(4) சனாதிபதி அவரது பதவியின் நிமித்தம், பராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கும் அதற்குச் சமாசாரம் அனுப்புவதற்கும் உரிமையுடையவராக இருத்தல் வேண்டும்.

**சனாதிபதியின் கடமைகள் தத்துவங்கள் மற்றும் பணிகள்**

33 (1) சனாதிபதியின் கடமைகள் பின்வருவனவாதல்

(அ) அரசியலமைப்பு மதிக்கப்பட்டு போற்றப்படுதலை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டை மேம்படுத்தல்.

(இ) அரசியலமைப்புப் பேரவை மற்றும் Vii அ என்னும் அத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனங்களின் முறையான செயற்பாட்டை உறுதிப்படுத்துதலும் வசதியளித்தலும் அத்துடன்

(ஈ) தேர்தல் ஆணைக்குழுவின் மதியுரையின் மீது சுகந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களும், மக்கள் தீர்ப்பும் நடைபெறுவதற்கான உகந்த நிபந்தனைகள் உருவாக்கப்படுதலை உறுதி செய்தல்.

(2) அரசியலமைப்பினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் சனாதிபதிக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் மேலதிகமாக சனாதிபதி பின்வரும் தத்துவங்களை உடையவராதல் வேண்டும்.:

(அ) பாராளுமன்றத்தின் அமர்வு ஒவ்வொன்றினதும் ஆரம்பத்திலும் பாராளுமன்றத்தின் அரசாங்கக் கொள்கைக் கூற்றை வாசிப்பதற்கும்.

(ஆ) பாராளுமன்றத்தின் சடங்கு முறையான இருக்கைகளில் தலைமைதாங்குவதற்கும்.

(இ) பாராளுமன்றத்தைக் கூட்டுதல், அமர்வு நிறுத்தல் அத்துடன் கலைத்தல்.

(ஈ) அரச தூதுவர்கள், உயர் ஆணையாளர்கள், பூரண அதிகாரம் பெற்ற அரசுப் பிரதிநிதிகள், ஏனைய இராஜதந்திர முகவர்கள் என்போரை ஏற்று அங்கீகரிப்பதற்க்கும் அவர்களை நியமித்துப் பொறுப்பளிப்பதற்கும்,

(உ) உயர் தொழிலில் பிரபலம் அடைந்துள்ளவர்களாகவும் உயர்ந்த நடத்தையையும் உயர் தொழிலில் நேர்மையையும் பேணி வந்துள்ளவர்களாகவும் இருக்கின்ற சட்டத்தரணிகளை சனாதிபதி வழக்குரைஞர்களாக நியமிப்பதற்கும், இப்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் சனாதிபதி வழக்குரைஞர் ஒவ்வொருவரும் இராணி வழக்குரைஞர் ஒருவரால் இதுவரை அனுபவிக்கப்பட்டு வந்துள்ளவையான அத்தகைய எல்லா சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்,

(ஊ) குடியரசின் பொது இலச்சினையைக் காப்பில் வைத்திருப்பதுடன், பிரதம அமைச்சிரினதும் அமைச்சரவையின் அமைச்சர்களினதும், பிரதம நீதியரசரினதும் உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளினதும், மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவரினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளினதும் நியமனப்பத்திரங்கள் மற்றும் குடியரசிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவும், வழங்கும் படியும் கையளிக்கும் படியும் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ள அல்லது சனாதிபதி தத்துவம் அளிக்கப்பட்டுள்ளனவுமான காணி வழங்கல்கள், காணிக்

கையளிப்புக்கள், அசைவற்ற ஆதனவழங்கல்கள், அசைவற்ற ஆதனக்கையளிப்புகள், ஆகியவற்றை பொது இலச்சினையின் கீழ் செய்வதற்க்கும், நிறைவேற்று வதற்கும், அந்த இலச்சினை பொறிக்கப்பட வேண்டிய எல்லா ஆவணங்களிலும் இலச்சினையிடுவதற்கும் இலச்சினையை பயன்படுத்துவதற்கும்,

(எ) போர் மற்றும் சமாதானம் என்பவற்றைப் பிரகடனஞ் செய்வதற்கும், அத்துடன்

(ஏ) அவராற் செய்யப்படவேண்டுமென நாட்டிடைச் சட்டத்தினால், வழக்காறினால், அல்லது வழமையினால் தேவைப்படுத்தப்படுவனவும் அல்லது அதிகாரமளிக்கப்படுவனவும், அரசியலமைப்பின் அல்லது எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாய் இராதனவும் ஆன அத்தகைய எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்வதாகும்.

**சனாதிபதி பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாதல்:**

33. அ. சனாதிபதி அரசியலமைப்பின் கீழும் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய அப்போதுள்ள சட்டம் உட்பட்ட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழும் தமது தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் உரியமுறையில் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்றத்திற்கு பொறுப்பதால் வேண்டும்.

**மன்னிப்பு வழங்கல்**

34. (1) இலங்கைக் குடியரசினுள்ளே நீதிமன்றம் எதிலும் எத்தவறுக்காகவும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டவரான தவறாளி எவரினதும் விடயத்தில் சனாதிபதி-

(அ) கட்டற்ற ஒரு மன்னிப்பை, அல்லது சட்டமுறையான நிபந்தனைகளுக்கு அமைந்த ஒரு மன்னிப்பை வழங்கலாம்.

(ஆ) அத்தகைய தவறாளிக்கு வழங்கப்பட்ட ஏதேனும் தண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றுதில், காலவரையற்ற அல்லது சனாதிபதி பொருத்தமென எண்ணக்கூடியவாறான அத்தகைய காலத்துக்கான காலந்தாழ்த்துதலையும் வழங்கலாம்.

(இ) அத்தகைய தவறாளியின் மீது விதிக்கப்பட்ட தண்டனைக்குப் பதிலாகக் கடூரம் குறைந்த ஒரு தண்டனையை விதிக்கலாம், அல்லது

(ஈ) அத்தகைய தவறு தொடர்பில் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை, அல்லது அத்தகைய தவறு தொடர்பில் வேறு விதத்தில் குடியரசுக்குச் செல்மதியான ஏதேனும் தண்டம் அல்லது பறிமுதல் முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைத் தளர்த்தலாம். ஆயின் நீதிமன்றம் எதனாலும் வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பின் மூலம் தவறாளி எவரும் மரணதண்டனைக்குள்ளாதல் வேண்டுமெனத் தீர்க்கப்பட்டுள்ளவிடத்து, சனாதிபதி அவ்வழக்கை விளக்கிய நீதிபதி தமக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டுமெனப் பணித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிக்கையைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்புதலும் வேண்டும். சனாதிபதி அங்ஙனம் அனுப்பும் போது சட்டத்துறை தலைமை அதிபதி அவ்வறிக்கை மீது தமது ஆலோசனையைக் கூறிய பின் அவ்வறிக்கை சட்டத்துறை தலைமை அதிபதியின் ஆலோசனையுடன் நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு அனுப்பப்படல் வேண்டுமெனவும், அவ்வமைச்சர் அவ்வறிக்கையைத் தமது விதப்புரையுடன்

சனாதிபதிக்கு அனுப்புதல் வேண்டுமெனவும் கூறும் அறிவுறுத்துரைகளுடன் அனுப்புதல் வேண்டும்.

(2) சனாதிபதி 89 ஆம் உறுப்புரையின் (ஈ),(உ),(ஊ),(எ) அல்லது (ஏ) என்னும் பந்திகளில் அல்லது 91 ஆம் உறுப்புரையின்(1) ஆம் பந்தியின் (எ) என்னும் உட்பந்தியிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தகைமையீனத்துக்கு அமைந்தவராக (உள்ள அல்லது அமைந்தவராக வந்துள்ள எவரேனுமாளின் விடயத்தில்-

(அ) கட்டற்ற ஒரு மன்னிப்பை அல்லது சட்டமுறையான நிபந்தனைகளுக்கு அமைந்த ஒரு மன்னிப்பை வழங்கலாம் அல்லது

(ஆ) அந்தத் தகைமையீனக் காலப்பகுதியைக் குறைக்கலாம்.

(3) ஏதேனும் தவறு புரியப்பட்டு அத்தவறுக்காகத் தவறாளி இலங்கைக் குடியரசினுள்ளே விளங்கக்கூடியவராய் இருக்கும்போது சனாதிபதி முக்கிய தவறாளியின் மீது அல்லது தவறாளிகள் ஒருவருக்கு மேற்பட்டவர்களாயின் அத்தகைய முக்கிய தவறாளிகளில் எவரேனும் ஒருவரின் மீது குற்றத்தீர்ப்பு அளிப்பதற்கு இட்டுச்செல்லும் அத்தகைய தகவலைத் தருகின்றவரான அத்தகைய கூட்டுக்குற்றவாளி எவருக்கும் சனாதிபதி ஒரு மன்னிப்பை வழங்கலாம்.

## 03. வடகொரியா (கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு) (தொடரும்)





வடகொரியா கிழக்கு ஆசியாவிலுள்ள கொரி யத் தீபகற்பத்தின் வட பகுதியில் அமைந்த ஒரு நாடாகும். இதன் வடக்கில் சீனாவும் ரஸ்யாவும் அமைந்துள்ளன. தெற்கே தென்கொரியா அமைந்துள்ளது. இரண்டாம் உலகப் போரின்பின் 1945, ஆகஸ்டு 15 இல் ஜப்பான் நாட்டிடம் இருந்து இந்நாடு சுதந்திரம் பெற்றது. வடகொரியா அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள நாடுகளினதும் விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்ளும் நாடுகளினதும் பட்டியலில் இடம் பிடித்துள்ளது.

உலக நாடுகளின் கண்டனங்கள், எதிர்ப்புகள் போன்ற எதையுமே கண்டுகொள்ளாமல், தொடர்ந்து அமெரிக்காவைக் குறிவைத்து அணு ஆயுத ஏவுகணைச் சோதனைகளை நடாத்தி வரும் வடகொரியாவால் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.



பரப்பளவு

| | | |
|---|---|---|
| மொத்தம் | - | 1,20,540 கிமீ$^2$ (46,528 சதுர மைல்) |
| மக்கள் தொகை | - | 23,113,019 (2006 கணக்கெடுப்பு) |
| தலைநகரம் | - | பியொங்யாங் |
| நாணயம் | - | வொன் (₩) (KPW) |
| ஆட்சி மொழி | - | கொரிய மொழி |
| அரசாங்கம் | - | கம்யூனிசம் |
| பிரதமர் | - | கிம் ஜோங்-உன் |
| மொ.உ.உ | - | 22.85 பில்லியன் (2006 கணக்கெடுப்பு) |
| அழைப்புக்குறி | - | + 850 |



கொரிய தீபகற்பத்தை ஆண்ட கார்வியோ வம்சத்தினரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, இங்கு 1932 முதல் ஜோஸியான் வம்ச ஆட்சிதான் சுமார் 50 ஆண்டு காலம் நிலவியது. 1910-ல் கொரியாவுடன் ஜப்பான் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் விளைவாக அன்று முதல் 1945 ஆம் ஆண்டு வரை ஜப்பானின் காலனித்துவ ஆதிக்கத்தில்தான் கொரியா இருந்தது. அக்காலத்தில் கொரிய மக்கள் தங்கள் பெயர்களை ஜப்பானிய மொழியில் மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும், ஜப்பானிய மொழியைக் கற்றுக்கொள்ளுமாறும் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். இதனால் இம்மக்கள் தங்கள் மொழியையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில்தான் இரண்டாம் உலகப் போர் வெடித்தது. இதில் ஜப்பான் தோற்கடிக்கப்பட்டமையால் கொரிய மக்கள் விடுதலைக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கினார்கள்.

1945-ம் ஆண்டு இரண்டாம் உலக மகா யுத்தத்தில் தோல்வியுற்ற ஜப்பான், நேச நாடு களிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து, அப்போதைய சோவியத் யூனியன் அரசு அதிரடியாக கொரியாவின் வட பகுதிக்குள் புகுந்து, ஜப்பான் வீரர்களை விரட்டிவிட்டு அதனைக் கைப் பற்றியது. இதே எண்ணத்தில் இருந்த அமெரிக்கா சோவியத் ரஷ்யாவுடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்தது. இதன் பிரகாரம் 38-வது அட்சயக் கோட்டின் வட பகுதியை வடகொரியா என்றும் தென் பகுதியை தென்கொரியா என்றும் இரு நாடுகளாக பிரித்தனர்.

இந்த நிலையில் 1947-ல் ஐ.நா. வடகொரியா மற்றும் தென்கொரியா ஆகிய இரண்டுக்கும் ஒரே ஜனநாயக அரசை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் அம்முயற்சிகள் தோல்வியுற்றமையால் 1947-ம் ஆண்டு, அக்டோபர் மாதம், Kim -sung அரசுதான் கொரியா முழுவதற்குமான அதிகாரம் உள்ள அரசு என்று சோவியத் ரஸ்யா அறிவித்தது. இந்நிலையில் தென்கொரிய குடியரசின் முதல் ஜனாதிபதி தேர்தலில் அமெரிக்காவின் ஆதரவுடன், இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக இருந்த கம்யூனிஸ எதிர்ப்பாளரான Syngman Rhee வெற்றிபெற்றார். இவரது அரசை சட்டபூர்வமான அரசாங்கம் என்று ஐ.நா அறிவித்தது.

சோவியத் ஒன்றியத்தின் ஆதரவைப் பெற்றிருந்த வடகொரியா ஜூன் 25, 1950-ல் தென் கொரியா மீது படையெடுத்து கொரிய தீபகற்பத்தின் 90 சதவிகிதமான பிரதேசத்தைக் கைப்பற்றியது. இந்நிலையில் ஐ.நா இவ்வுள்ளாட்டுப் போரில் தலையிட்டமையால் அமெரிக்கா உள்ளிட்ட பதினாறு நாட்டுப் படைகள் வட கொரியா மற்றும் ரஸ்யாவின் பிடியிலிருந்த தென்கொரியாவை விடுவித்தது. மூன்று ஆண்டுகள் இடம் பெற்ற இக் கொரிய யுத்தத்தில் பல இலட்சக்கணக்கான உயிர்கள் மாண்டு போயின.

பின்னர் போர் நிறுத்தம் செய்யப்பட்டது. இந்நிலையில் முழுமையான யுத்த நிறுத்தம் ஒன்று அமைதி உடன்படிக்கைக்குப் பின் தொடரும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் சொல்லப்பட்ட அந்த "அமைதி உடன்படிக்கை" இன்னும் ஏற்படாமையினால் இப்பிரச்சனை தொடர்ந்த வண்ணமாக இருக்கின்றது.

வட கொரியா தலைநகர் பியோங்யாங்கில் இருந்து வெளியிடப்படும் புகைப்படங்களில் பரந்த, அழகிய நெடுஞ்சாலைகளையும், போக்குவரத்து நெரிசல் இல்லாத சாலை களையும் காணமுடியும். ஆனால் தலைநகரத்திற்கு வெளியில் கதையே வேறு.

2006 ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்களின்படி வட கொரியாவில் சுமார் 25,554 கி.மீ சாலைகள் உள்ளன. ஆனால் வெறும் 3% மட்டுமே, அதாவது சுமார் 724கி.மீ (449 மைல்) அளவு நீளம் மட்டுமே முறையாக போடப்பட்ட சாலைகள்.

வட கொரிய மக்களில் ஆயிரத்தில் 11 பேர் மட்டுமே கார் வைத்திருப்பவர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே மக்கள் பயணம் செய்ய வேண்டுமானால் பொதுப் போக்கு வரத்துக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை நிலவுகின்றது.

மக்கள் தொகையின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய நாடுகளில் 52வது இடத்தில் இருக்கும் வடகொரியா, உலகின் நான்காவது பெரிய ராணுவத்தைப் பெற்றிருக்கிறது. வடகொரியா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25 சதவீதத்தை ராணுவத்துக்கு செலவிடுவதாகக் கணக்கிடப்படுகிறது. மேலும் கிட்டத்தட்ட அனைத்து வட கொரிய ஆண்களும் ஏதோ ஒருவகை ராணுவப் பயிற்சியைப் பெற்றிருப்பார்கள்.

**வடகொரியாவுக்கும் தென்கொரியாவிற்கும் இடையிலான வேறுபாடுகள்**

- தென்கொரியாவைத் தனது ஆளுமையின் கீழ் கொண்டுவந்து ஒன்றுபட்ட கொரியாவை உருவாக்கிவிட வேண்டும் என்ற தனது மூதாதையர்களின் ஆசையை நிறைவேற்றும் விதமாகத்தான், தற்போதைய வடகொரிய அதிபர் கிம் ஜாங் கின் செயற்பாடுகள் அமைந் துள்ளன. அணு ஆயுதச் சோதனைகளை நாடத்தியும், எல்லைப் பகுதிகளில் தாக்குதல் களை நாடத்தியும், ராணுவ வலிமை மூலம் ஒன்றுபட்ட கொரியாவை உருவாக்கிவிட வேண்டும் எனத் துடிக்கின்றார்.
- தென்கொரியாவுக்கும் ஒன்றுபட்ட கொரியாவாக இருக்க வேண்டும் என்ற ஆசை இருக் கிறது. ஆனாலும் ஜனநாயக மற்றும் முதலாளித்துவ முறைகளில் ஒன்றிணைக்க வேண் டும் என விரும்புகிறது. ஆனால் வடகொரியாவோ தனது முதல் கம்யூனிஸ ஆட்சியாள ரான Kim -sung Juche இன் சித்தாந்தத்தின்படி ஒன்றிணைய வேண்டும் என விரும் புகிறது.
- ஒன்றுபட்ட கொரியாவின் தலைவர் ஜனநாயக முறையிலான தேர்தல் மூலம் தேர்ந் தெடுக் கப்படல் வேண்டும் எனத் தென்கொரியா விரும்புகிறது. ஆனால் வடகொரியாவோ தற் போதைய அதிபர் கிம் ஜாங்கும், அவரது வாரிசுகளுமே கொரியாவை ஆள வேண்டும் என விரும்புகிறது.
- முதலாளித்துவ கொள்கைதான் தனது பொருளாதாரத்துக்கு ஆதாரமானது என்று தென் கொரியா கருதுகிறது. ஆனால் வடகொரியாவோ கம்யூனிஸ கொள்கையைக் கொண் டுள்ளது.
- வடகொரியா ஒரு முழுமையான ராணுவ மயமாக்கப்பட்ட தேசமாக உள்ளது. ஆனால், தென்கொரியாவோ ராணுவத்துக்கு முக்கியத்துவம் அளித்தாலும், ராணுவ இராச் சியத்தை தேசியக் கொள்கையாக ஏற்றுக்கொள்ள முடியாது என்ற கருத்தைக் கொண் டுள்ளது.
- வடகொரியா ஒரு சர்வாதிகாரியின் ( கிம் ஜாங் உன் ) கீழ் கம்யூனிஸ அரசாங்கத்தால்

ஆளப்படுகிறது. அனைத்துத் துறைகளும் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படுகின்றது. பழைமையானதும் அதே சமயம் மிகவும் பலம் வாய்ந்ததுமான ராணுவத்தைக் கொண்டுள்ளது வடகொரியா. அந்த நாட்டின் தற்போதைய ஒரே ஆதரவாளர் சீனா மட்டுமே.

- தென்கொரியா மேற்குலக நாடுகளைப் போன்று ஜனநாயக அரசாங்கத்தைக் கொண்டிருக்கிறது. வடகொரியாவுடன் ஒப்பிடுகையில் அதனைக் காட்டிலும் நல்ல வளர்ச்சியை எட்டியுள்ளதோடு, ஏனைய உலக சமுதாயத்தினருக்கும் தனது நாட்டில் இடமளித்துள்ளது.


- தென்கொரியா மேற்குலக நாடுகளைப் போன்று ஜனநாயக அரசாங்கத்தைக் கொண்டிருக்கிறது. வடகொரியாவுடன் ஒப்பிடுகையில் அதனைக் காட்டிலும் நல்ல வளர்ச்சியை எட்டியுள்ளதோடு, ஏனைய உலக சமுதாயத்தினருக்கும் தனது நாட்டில் இடமளித்துள்ளது.


- தென்கொரியாவிடம் அணு ஆயுதங்கள் ஏதும் கிடையாது ஆனால் வடகொரியாவைக் காட்டிலும் அமெரிக்க ஆதரவுடன் நவீன மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய ராணுவத்தைக் கொண்டுள்ளது. இதனால், தென்கொரியா ராணுவ ரீதியில் பலம் பெற்றுவிடக் கூடாது என்பதற்காகத்தான் அணு ஆயுத பலத்தைப் பெருக்கிக்கொண்டு வருகிறது வடகொரியா


- 1948ஆம் ஆண்டில் வடகொரியாவை திறமையுடன் நிறுவிய கிம் இல்-சுங்கின் குடும்ப வம்சத்தினரே அன்று முதல் இன்றுவரை நாட்டை ஆட்சி புரிகின்றார்கள். ஆனால் தென் கொரியா ஆறு குடியரசுகள், ஒரு புரட்சி, சில சதிகளையும் சந்தித்து, சுதந்திரமான நியாயமான தேர்தல்களை நோக்கி நகர்ந்துள்ளது. தென்கொரியாவில் இதுவரை, மொத்தம் 12 அதிபர்கள் 19ஆட்சிக் காலங்களை வழிநடத்தியுள்ளனர். அதாவது சில அதிபர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட முறை அதிபராக பொறுப்பு வகித்துள்ளனர்.

- 1973 ம் ஆண்டு வரை வட கொரியாவும் தென் கொரியாவும் செல்வத்தின் அடிப்படையில் ஒரே நிலையில் இருந்தன. பின்னர், தென் கொரியா உலகின் முன்னணி தொழில்துறை தயாரிப்புக்களான சாம்சங் மற்றும் ஹுண்டாய் என்பவற்றின் ஊடாக உலகத்தின் கவனத்தை தன்பக்கம் ஈர்த்தது. வட கொரியா அரசே அனைத்தையும் நடத்தவேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததால் 1980 களில் தேக்க நிலையை சந்தித்தது.

- வடகொரியாவில் பிறப்பு வீகிதம் அதிகமாக உள்ள போதிலும் நாட்டின் பொருளாதார நிலை வறுமை என்பன அந்நாட்டு மக்களின் சராசரி ஆயுட் காலத்தினை 12 ஆண்டுகள் வரை குறைத்துள்ளது. ஆனால் வளம் மிக்க தென்கொரியாவில் பிறப்பு விதம் குறைவாக இருப்பதனால் அந்நாட்டு அரசே குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பல வசதிகளினையும் சலுகைகளினையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

- 21 ஆம் நூற்றாண்டிற்குள் இன்னும் காலடி எடுத்து வைக்காத அளவு வடகொரியா தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக சித்தரிக்கப்படுகிறது. அந்த நாட்டில் இருந்து புள்ளி விவரங்கள் பெறுவது கடினமானது என்ற நிலையில் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டே அந்த நாட்டைப் பற்றி கணிக்கப்படுகிறது.

## 04. ஆமணக்கு



**உயிரியல் வகைப்பாடு**

திணை: தாவரம்

துணைத்தொகுதி: அகலிஃபோய்டியே

வகுப்பு: மக்னோலியோப்சிடா

வரிசை: மல்பிகியாலெஸ்

குடும்பம்: இயுஃபோர்பியேசியே

இனம்: ரி. கொம்யூனிஸ்

வேறு பெயர்கள்:

ஏரண்டம், சித்திரம், தலரூபம

இருசொற் பெயரீடு:

ரிசினஸ் கொம்யூனிஸ்

லின்.

ஆமணக்குச் செடிகள் பொதுவாக கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் அதிகளவில் காணப்படுகிறது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் வறட்சியான இடங்களிலும் வளர்கின்றன. ஆமணக்கின் தாயகமாக எத்தியோப்பியாவை கருதினாலும் இந்தியாவில்தான் ஆமணக்கு அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

ஆமணக்குச் செடி எப்பொழுதும் பசுமையோடு இருக்கும் ஒரு வகையான புதர்ச் செடியாகும். இதனை ஒரு சிறிய மரம் என்றே கூறலாம். பத்து மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. இதன் தண்டுப் பகுதியில் வெள்ளை நிறப் படிவு காணப்படுகின்றது. நீண்ட காம்பைக் கொண்ட இதன் இலைகள் மிகப் பெரியதாகவும், அகன்றும், மேற்பகுதி வட்டமாகவும், பெரிய கொத்தாகவும் காணப்படும். ஆண், பெண் என இரு வகை மலர்களையும், கோள வடிவிலான கனிகளையும் இம்மரங்களில் காணலாம். ஆண் மலரில் மகரந்தத்தூள்கள் பல கற்றைகளாகவும், பெண் மலரில் சூல்பை மூன்று அறைகளையும் கொண்டதாய் காணப்படுகின்றது. இம்மரமானது ஆண்டு முழுவதும் பூக்கின்றது. ஆமணக்கில் 16 வகைகள் இருந்தாலும் சிற்றாமணக்கு, பேராமணக்கு, செவ்வாமணக்கு, காட்டாமணக்கு ஆகிய 4 ஆமணக்கு வகைகள் தான் எளிதாக எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன.

பழங்கால மக்கள் ஆமணக்கு எண்ணெயை விளக்கு எரிப்பதற்கு பெருமளவில் பயன்படுத்தினர். இதனால் இதனை விளக்கெண்ணெய் என்றும் அழைப்பர். இது புகையினை வெளிவிடாத சிறப்புடையது

ஆமணக்கு நிறைய மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது. இதன் இலைகள், வேர் மற்றும் விதை என்பனவற்றிலிருந்து பெறப்படும் எண்ணெய் என்பன பல நோய்களை குணமாக்குகின்றன. பொதுவாக இவ் எண்ணெய் கசப்புச்சுவையும், வெப்பத் தன்மையும், கொண்டவை. இலை, உடல் வீக்கம், கட்டி, வாதம் ஆகியவற்றைக் கரைக்க

வல்லது. அத்துடன் இது தாய்ப்பால் சுரத்தலை அதிகரிக்கின்றது. வேர் வாதநோய்களைக் குணமாக்கும். விதைகள், வயிற்றுவலி, சிறுநீர் அடைப்பு, வீக்கம் ஆகியவற்றைப் குணமாக்கும். ஆமணக்கு எண்ணெய் மலசிக்கலைப் போக்குவதுடன் வறட்சித் தன்மையையும் நீக்க வல்லது. ஆமணக்கு விதையின் மேல்தோலை நீக்கி, பருப்பை அரைத்து, பசையாக்கி, கட்டிகளின் மீது பூசிவர கட்டிகள் உடையும். 3 தேக்கரண்டி விளக்கெண்ணெயுடன் சிறிதளவு இஞ்சிச்சாறு கலந்து உட்கொள்ள மலச்சிக்கல் தீரும். பேதியாகும் வாய்ப்பும் உண்டு. அவ்வாறு ஏற்பட்டால் 2 டம்ளர் மோர் குடிக்கலாம்.

- ஆமணக்கு இலையை சிறு துண்டுகளாக்கி விளக்கெண்ணெய் விட்டு வதக்கி பாதிக் கப்பட்ட இடத்தில் ஒத்தடம் கொடுக்க வீக்கம் குறையும்.
- மார்பகக் காம்புகளில் ஏற்படும் வெடிப்புகள் மற்றும் புண்கள் குணமாக ஆமணக்கு எண்ணெயைத் தூய்மையான, மெல்லிய பருத்தித் துணியில் ஊறவைத்து, அதை பாதிக்கப்பட்ட இடத்தில் போட்டுவர குணமாகும்.
- 4 தேக்கரண்டி அளவு ஆமணக்கு எண்ணெய்யுடன் 1 தேக்கரண்டி அளவு தேனை நன்றாகக் கலந்து உட்கொள்ள சுகபேதியாகும். சிறுவர்களுக்கு இந்த அளவில் பாதியும், குழந்தைகளுக்கு இந்த அளவில் நான்கில் ஒரு பங்கும் கொடுக்கலாம். இது ஒரு சிறந்த கை மருந்தாகும்.
- தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்க பசுமையான ஆமணக்கு இலையை நெய் தடவி, நெருப்பில் இலேசாக வதக்கி, இளஞ்சூடான நிலையில் மார்பில் வைத்துக் கட்டலாம். அல்லது ஆமணக்கு இலையைச் சிறு துண்டுகளாக அரிந்து, தேவையான அளவு துவரம் பருப்பு சேர்த்து கீரையாகச் செய்து சாப்பிட்டு வர வேண்டும்.
- ஆமணக்கு இலையுடன் சம அளவு கீழாநெல்லி இலையைச் சேர்த்து அரைத்து எலுமிச் சம்பழம் அளவில் உருண்டையாக்கி காலையில் உட்கொண்டு வர மஞ்சள் காமாலை குணமாகும். இந்த நாட்களில் உணவில் புளி, உப்பு நீக்கிப் பத்தியம் கடைப்பிடிக்க வேண்டும். ஆமணக்கெண்ணெய் பொதுவாக வயிற்றைச் சுத்தம் செய்வதற்காகவும், வயிற்றிலுள்ள பூச்சிகளை வெளியேற்றுவதற்காகவும் பயன்படுத்தப்டுகின்றது.
- ஆயுர்வேதத்தில் வாயு சம்பந்தமான பிரச்சனைகளுக்கு இவ்வெண்ணையினை பயன் படுத்துகின்றனர். இருமல் உள்ளவர்களுக்கு விளக்கெண்ணெய் 2 பங்கு, தேன் ஒரு பங்கு சேர்த்து உட்கொள்ள கொடுக்க நோய் குணமாகும். உடற்பருமனைக் குறைப்பதற்கும் பயன்படுகிறது.
- ஆமணக்கு எண்ணெய் உடலில் உள்ள நச்சுகளை அகற்றி உடல் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது. இதில் வைட்டமின் ஈ அதிகளவில் காணப்படுவதாலும் அழற்சி எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளதாலும் பாக்டீரியா தொற்று காரணமாக ஏற்படும் முகப்பரு மற்றும் வீக்கம் என்பவற்றைக் குறைக்கிறது. இவ்வெண்ணெய்யினை தலை யில் தடவுவதன் மூலம் பொடுகு குறைந்து தலைமுடி உதிர்வதும் குறைவதுடன் முடி வளர்ச்சி பெறவும் உதவுகிறது.
- அதிவேக மகிழுந்து மற்றும் விமானம் என்பனவற்றின் இயந்திரங்களின் உராய்வை தடுக்கவும், சோப்பு, காகிதம், அச்சு, மை, வர்ணபூச்சு போன்றவற்றிற்கும் ஆமணக்கு

பயன்படுத்தப்படு கின்றது. இது மட்டுமின்றி வெடி மருந்து பொருட்கள் தயாரிப்பிலும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும் அதிக அளவில் ஆமணக்கு பயன்படுத்தப்படுகிறது.

- ஆமணக்கு எண்ணெய் பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிக நுகர்வு ஆபத்தானது. இது வயிற்றுப்போக்கு, தசைப்பிடிப்பு, மயக்கம், குமட்டல், இரைப்பை எரிச்சல், தோல் தடிப்பு, நச்சுத்தன்மை என்பனவற்றை ஏற்படுத்தும்.
  ஆமணக்கு எண்ணெய் தொடர்ச்சியாக உட்கொள்வதை தவிக்கவும். இதனை 7 நாட்க ளுக்கு மேலாக உபயோகிக்க கூடாது. ஆமணக்கு விதைகளைப் பச்சையாக / காய்ந்த நிலையில் அப்படியே சாப்பிடுவது மிகவும் ஆபத்தானது. இதிலுள்ள நச்சுத் தன்மை மரணத்தினையும் ஏற்படுத்திவிடக் கூடும். ஆமணக்கு எண்ணெய் பயன்படுத்தும் பொழுது மருத்து வரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது சிறப்புடையது.

- ஆமணக்கு செய்கைக்கு வடிகால் வசதியுடன் கூடிய கார, அமிலத் தன்மையற்ற வண்டல், செம்மண் நிலங்கள் மிகவும் உகந்தவை.
- இதனை பயிரிடுவதற்கு ஜூன், ஜூலை, செப்டம்பர்; அக்டோபர் மாதங்கள் சிறந்த பருவங்கள் ஆகும். ஆமணக்கின் வளர்ச்சிக்கு $20^\circ$ முதல் $32^\circ$ செல்சியல் வரையான வெப்பநிலை சிறப்புடையது. வெப்பநிலை அதிகமானால் ஆண் பூக்கள் அதிகம் தோன்றி விளைச்சல் குறையும். மழை அளவு ஆண்டிற்கு 750 மி.மீ. அளவு பரவலாகக் காணப்படுவது மிகச் சிறந்தது. நீர் தேங்கி நிற்கும் நிலத்தில் பயிர் செய்வதை தவிர்க்க வேண்டும்.
  கும்பகோணத்திற்கு மேற்கில் அமைந்துள்ள திருக்கோட்டையூர் என்ற திருக்கோயில் தலவிருட்சமாக ஆமணக்கு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**05. இலங்கையின் முதல் செய்மதி**

விண் கலங்கள் வரிசையில் செய்மதியானது மனிதனால் உருவாக்கப்பட்டு விண் வெளி சுற்றுப்பாதைக்கு அனுப்பப்பட்டு அதனூடாக பல தகவல்கள் பெறப்பட்டு வருகின்றது. இது நிலா போன்று விண்வெளியில் உலா வருவதினால் இதற்கு செயற்கைக் கோள் என்ற பெயர் வந்தது.

1957 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தால் ஸ்புட்னிக்- 1 என்கின்ற முதல் செயற்கைக் கோள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. தொடர்ந்து அமெரிக்கா, இங்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சீனா, ஜப்பான், இந்தியா எனப் பல நாடுகள் தமது செயற்கைக்கோள் களினை விண் வெளியில் நிலை நிறுத்தியுள்ளன. இந்த வரிசையில் தற்போது இலங்கையும் இணைந் துள்ளது.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக இலங்கையின் பொறியியலாளர்களினால் நிர்மாணிக்கப்பட்ட இராவணா-1 செய்மதி 2019 ஏப்ரல்18 அதிகாலை 2.16 மணிக்கு அமெ ரிக்காவிலிருந்து சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு 2019 ஏப்ரல்19 அன்று விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.



இந்தச் செய்மதியானது, ஜூன் 17ஆம் திகதி விண்வெளியின் சுற்றுப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் - வெர்ஜினியா பிராந்தியத்திலிருந்து நாசா விண்வெளி நிறுவனத் தின் ஏவூர்திப் பொறியின் மூலம், புவியிலிருந்து சுமார் 400 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சர்வதேச விண்வெளி மையத்திற்கே இந்த செய்மதி கொண்டுசெல்லப்படுகின்றது.

ஜப்பானின் கியூ பல்கலைக்கழகத்தின் பர்டிஸ் என்ற விசேட திட்டத்தின்கீழ் தயாரிக் கப்பட்டுள்ள ஆயிரம் கனசென்றிமீற்றர் நீளமுடைய இராவணா - 1 செய்மதியானது, 1.1 கிலோ கிராம் நிறைகொண்டதாகும்.

ஆர்த்தர் சீ.க்ளாக் மையத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சனத்பனாவென் னவின் யோசனைக்கு அமைய, இந்த செய்மதி திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்கு இரா வணா- 1 என்றும் பெயரிடப்பட்டுள்ளது. தரிந்து தயாரத்ன மற்றும் சிரானி சாமிகா ஆகிய இரண்டு இலங்கையர்களால் தயாரிக்கப்பட்ட "இராவணா- 1" செய்மதி கடந்த பிப்ரவரி மாதம் 18ஆம் திகதி ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இச் செய்மதி விண்ணில் நிலைநிறுத்தப்பட்டதன் பின்னர், இலங்கையையும் அதனைச் சூழவுள்ள வலையத்தையும் நிழற்படம் எடுத்தல் உள்ளிட்ட 5 செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

நாளொன்றுக்கு 15 தடவைகள் பூமியை சுற்றி வலம்வரவுள்ள இந்தச் செய்மதியின் வேகம் வினாடிக்கு 7.6 கிலோ மீற்றராக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





## 06. உலகின் மிகப் பெரிய விமானம்

பிரபல கணிப்பொறி மென்பொருள் தயாரிப்பு நிறுவனமான "மைக்ரோசாப்" கம்பெனி 1975ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இதனை பில் கேட்ஸ்சும், பால் ஆல்லென்னும் இணைந்து கூட்டாக உருவாக்கினார். இதில் பால் ஆல்லென் என்பவர் விமானம் வானத்தில் பறந்து கொண்டிருக்கும் போது அதிலிருந்து விண்ணிற்கு விண்கலங்களை ஏவும் வகையிலான வசதிகளுடன் கூடிய பெரியதொரு விமானத்தை உருவாக்க எண்ணினார்.

இதன் விளைவாக பால் ஆல்லென் 2011-ம் ஆண்டில் "ஸ்டிராட்டோலான்ச்" என்ற புதிய நிறுவனத்தை தொடங்கினார். இங்கு தான் அவரது எண்ணப்படி அந்தப் பெரிய விமானம் உரு வாக்கப்பட்டது. இரட்டை விமானத்தைப் போன்ற உடலமைப்பில், 385 அடி அகலத்தையும், 238 அடி நீளத்தையும் கொண்டதான இந்த விமானம் சுமார் 50 லட்சம் பவுண்டு எடை கொண்டதாகும். இதில் ஆறு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது. இதை நிறுத்தி வைக்க ஒரு பெரிய கால்பந்து திடல் அளவிலான இடம் தேவை.

விமானத்தின் வடிவமைப்பு,கட்டுமானப் பணிகள் முடிந்த பின்னர் சோதனை ஓட்டமாக (அமெரிக்க நேரப்படி 13-4-2019 அன்று காலை 6.58 மணியளவில்) பறக்க விடுவதற்கு நாள் குறிக்கப்பட்டது.

அதன்படி, கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள மோஜாவே விமான மற்றும் விண்வெளி துறைமுகத்தில் இருந்து இந்த "ஸ்ட்ராடோலான்ச்" விமானம் புறப்பட்டு சென்றது.

மோஜாவே பாலைவனப் பகுதியில் 17 ஆயிரம் அடி உயரத்தில் மணிக்கு 189 மைல் வேகத்தில் சுமார் இரண்டரை மணிநேரம் வெற்றிகரமாக பறந்த இந்த விமானம் புறப்பட்ட இடத்தில் பத்திரமாக தரையிறங்கி புதிய சாதனையை உருவாக்கியுள்ளது.

எதிர்காலத்தில் இந்த விமானத்தை சுமார் 10 கிலோ மீட்டர் உயரத்திற்கு பறக்க செய்து, அதிலிருந்து விண்கலத்தை ஏவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் வெற்றிய டையும் பட்சத்தில், தற்பொழுது விண்கலங்களை பூமியிலிருந்து ஏவுவதற்குக்குச் செலவாகும் செலவீனங்கை குறைக்க முடியும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த வரலாற்றுப் பெருமைக்குரிய சாதனைக்கு சொந்தக்காரராக கருதப்படும் பால் ஜி ஆல்லென் கடந்த 15-10-2018 அன்று தனது 65-வது வயதில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.



## 07. புற்றுநோய்

இன்று உலகில் உயிராபத்தை விளைவிக்கக் கூடிய பல நோய்கள் காணப்படுகின்றன. இவற்றுள் புற்றுநோய்கள் முக்கிய இடம் பெறுகின்றது. இன்று ஆறில் ஒரு உயிரிழப்புக்கு காரணம் புற்றுநோய் என்று கூறுகிறது உலக சுகாதார நிறுவனம். எனவே இப்பு ற்றுநோயின் பாதிப்பு எந்தளவு தூரம் மனிதர்களைத் தாக்குகின்றது என்பதனை நாம் இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இந்நோய் பற்றி நாம் அறிந்திருப்பது அவசியமாகின்றது. முதலில் புற்றுநோய் என்றால் என்னவென்று பார்ப்போம்.

சாதாரணமாக, எமது உடலில் உள்ள உயிர்க்கலங்கள் நிலையாக வளர்கின்றன. அதாவது, பழைய உயிர்க்கலங்கள் இறக்கும் போது புதிய உயிர்க்கலங்கள் தோன்றுகின்றன. உயிர்க்கலங்களின் வளர்ச்சியினை ஒழுங்கமைக்கும் பொழுது பொறுப்பான மரபணுக்களில் ஏற்படுகின்ற சடுதியான மாற்றங்கள் புற்றுநோயை ஏற்படுத்துகின்றன. எனினும் சடுதியான மரபணு மாற்றங்களினால் இவ் உயிர்க்கலங்களானது கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பிரிவடைந்து, அவை போன்ற அதிக உயிர்க்கலங்களை உருவாகுகின்றன. இவை கட்டிகளாக தோற்றம் பெறுகின்றன.

புற்றுநோய் பல உறுப்புகளில் வந்தாலும் நுரையீரல், கல்லீரல், பெருங்குடல், வயிறு மற்றும் மார்பகம் ஆகிய உறுப்புக்களில் உண்டாகும் புற்று நோய்களே அதிக அளவில் காணப் படுகின்றது. புற்றுநோய்களில் பல வகைகள் உள்ளன. அவற்றில் வாய்ப்புற்று நோய், சுவாசத் தொகுதி புற்றுநோய், உணவு கால்வாய்த் தொகுதி புற்றுநோய், மார்புப் புற்றுநோய், கருப்பை கழுத்து புற்றுநோய், பெருங்குடல் மற்றும் மலவாசல் புற்றுநோய், ஆண்களுக்கு ஏற்படும் சுக்கிலச்சுரப்பி புற்றுநோய், தைரொய்ட் சுரப்பி புற்றுநோய் என்பன குறிப்பிடத்தக்கவை. பொது வாக மனிதனின் நடத்தைகளும் அவனது உணவுப் பழக்கவழக்கங்களும் தான் பெருமளவு புற்றுநோய்கள் உண்டாவதற்கு காரணமாகின்றன. குறிப்பாக இந்நோய் ஏற்படுவதற்கு பிர தானமான காரணமாக புலையிலையும் அதனுடன் இணைந்த பொருட்களின் பாவனையும் குறிப்பிடப்படுகிறது. உலகில் 22% பேருக்கு புற்றுநோய் வரக் காரணமாக இருப்பது புகையி லைப் பழக்கம்தான். அது புகைப் பிடித்தல் மட்டுமல்ல. வேறு எந்த வகையில் புகையிலைப் பொருட்களை உட்கொண்டாலும் புற்றுநோய் வர வாய்ப்புண்டு. எனினும் இது தவிரவும் பல காரணிகள் இந்நோயை ஏற்படுத்துகின்றது. இதில் புகையிலைப் பொருட்களை உட்கொள்வது, வெற்றிலை மெல்லுதல், மது அருந்தும் பழக்கம், அதிக உடல் எடையுடன் இருப்பது, குறைந்த அளவில் பழங்களையும் காய்கறிகளையும் உட்கொள்வது, உடல் உழைப்பு இல்லாமை போன்ற முக்கிய காரணிகள் புற்றுநோய் ஏறட்படுவதற்கு காரணமாகின்றன என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆண்,பெண் வேறுபாடுகள் இன்றி எல்லா மட்டத்தினரையும் பாதிக்கக் கூடியதே புற்றுநோய்கள். இருப்பினும் இப்புற்றுநோய்களைப் பொறுத்த வரை அவற்றில் மூன்றில் ஒரு பகுதியை முழுமையாகத் தவிர்த்துக் கொள்ளவும், மற்றொரு மூன்றிலொரு பகுதியை ஆரம்ப பகுதியிலேயே இனம் கண்டால் முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளவும் முடியும். இது



மருத்துவத் துறையினரின் அறிவிப்பாகும். இருந்தும் இந்த உண்மையைப் பெரும்பாலானவர்கள் அறியாதுள்ளனர். இதன் காரணத்தினால் தான் புற்றுநோய் இன்றைய உலகில் பொது சுகாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது.. இப்புற்றுநோய்கள் காரணமாக வருடமொன்றுக்கு 8.2 மில்லியன் பேர் உயிரிழக்கின்றனர் என்றும் இவர்களில் 04 மில்லியன் பேர் 30 முதல் 60 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கையிலும் புற்றுநோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்தே செல்கின்றது. அதேநேரம் நம் நாட்டில் வாய்ப் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய், சுவாச தொகுதி புற்றுநோய், உணவுக் கால்வாய் மற்றும் குதவாசல் புற்றுநோய் ஆகியவவை அதிகளவில் ஆண்களையும் மார்பு புற்றுநோய், கருப்பை கழுத்து புற்றுநோய், உணவுக் கால்வாய் புற்றுநோய் ஆகியவை அதிகளவில் பெண்களையும் பாதிக்கின்றன. இந்தவகையில் வருடாந்தம் வாய்ப் புற்றுநோய்க்கு உள்ளானவர் சுமார் 2,000 பேரும், மார்பு புற்றுநோய்க்கு உள்ளானவர் சுமார் 2,500 பேரும், கருப்பை கழுத்து புற்றுநோய்க்கு உள்ளானவர் சுமார், 1,000 பேரும் என்ற அளவில் இனம் காணப்படுகின்றனர். அத்தோடு வருடாந்தம் புற்று நோய் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தவாறே இருக்கின்றது. 2005 ஆம் ஆண்டில் 9403 பேர் புற்றுநோய்கள் காரணமாக உயிரிழக்க, 2009 ஆம் ஆண்டில் அது 11,286 பேர் வரை அதிகரித்தது. தற்போது நம் நாட்டில் 11,000 முதல் 12,000 பேர் வரையானோர் இந்நோய்களினால் வருடாந்தம் உயிரிழப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பது வெற்றிகரமிக்க சிகிச்சைக்கான சந்தர்ப்பங்களைப் பாரியளவில் அதிகரிக்கும்.


தற்போது கல்லீரல், கணையம், நுரையீரல், வயிறு, சினைப்பை, மார்பகம், உணவுக் குழாய், பெருங்குடல் என்பவற்றில் ஏற்படும் எட்டு வகையான புற்றுநோய்களை ஒரே சோதனையில் கண்டறியும் வழிமுறை ஒன்றை ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர். புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிந்து பல உயிர்களை காப்பாற்றுவதே தங்கள் நோக்கம் என்று அவர்கள் கூறியுள்ளனர். "கேன்சர்சீக்" (Cancer seek) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த சோதனை, 16 வகையான ஜீன்களிலும், உடலால் வெளியிடப்படும் எட்டு வகையான புரதங்களிலும் புற்றுநோய் வரும்போது உருவாகும் மாற்றங்களை ஆராயும். இதன் மூலம் புற்றுநோய் இழப்புக்களை பெருமளவில் தவிர்க்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உயிராபத்தை ஏற்படுத்தும் இப்புற்றுநோய்கள் தொடர்பாக ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக உடலிலும் உருவத்திலும் ஏதாவது மாற்றங்களும் வித்தியாசங்களும் ஏற்படுமாயின் தாமதியாது மருத்துவ நிபுணரை அணுகி மருத்துவ ஆலோசனையின் அடிப்படையில் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் மூலம் புற்றுநோய்கள் பலவற்றை ஆரம்பத்திலேயே குணப்படுத்திக் கொள்ளவும் முடியும்.

புற்றுநோயைப் பொறுத்த வரை அது ஆரம்ப நிலையில் கண்டறியப்படுமாயின் அதனை முழு மையாக மாற்றக்கூடிய அளவிற்கு இன்றைய மருத்துவ உலகம் வளர்ச்சி பெற்றுள்ளது. ஆனால் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்பு இன்னும் மக்களைச் சரியாக போய் சென்ற டையமையினால் பெரும்பாலனோர் இந்நோயின் அதீத பாதிப்புக்குள்ளான பின்னரே மருத் துவ வசதியினை நாடுகின்றனர். இதனால் ஆரம்பத்தில் ஒரு உறுப்பைத் தாக்கும் இந்நோய் படிப்படியாக பல இடங்களுக்குப் படர்கிறது. இதனால் இவர்கள் உயிர் வாழ போராட வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். எனவே ஒருவருக்கு இந்நோய் இருப்பதை எவ்வாறு கண்டறியலாம் என்பது பற்றி பார்ப்போம்.

தொடரும்...

**08. கலிலியோ கலிலி**




ஒன்பது கோள்களில் ஒன்றான பூமி சூரியனை சுற்றுகின்றது என்றும் நிலா பூமியை சுற்றுகின்றது என்றும் நாம் இன்று அறிந்திருக்கின்றோம். இதுவே அறிவியல் ரீதியாக நிருபிக்கப்பட்ட உண்மையாகும். ஆனால் 500 ஆண்டுகளுக்கு முன்புவரை பூமிதான் பிரபஞ்சத்தின் நடுநாயகம் என்றும், நிலாவும் சூரியனும் பூமியை சுற்றுகின்றன என்றும் உலகம் நம்பிக்கொண்டிருந்தது. அது பொய் சூரியனை சுற்றிதான் அனைத்தும் சுழல்கின்றன என்ற உண்மையைச் சொல்லியதால், சொல்லனா துயரங்களை அனுபவித்த ஒருவர்தான் கலிலியோ கலிலி. இவர் "நவீன வானியல் ஆய்வுகளின் தந்தை", "நவீன இயற்பியலின் தந்தை", "அறிவியலின் தந்தை", மற்றும் "நவீன அறிவியலின் தந்தை என்றெல்லாம் பெருமையாக அழைக்கப்படுகிறார்.

இவர் இத்தாலியின் பைசா நகரில் 1564-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15ஆம் திகதி குழல் இசைக்கருவிக் கலைஞரும் இசையமைப்பாளருமான வின்சென்சோ கலிலி மற்றும் கியுலியா அம்மனாட்டிக்கும் மகனாகப் பிறந்தார். இவரது குடும்பம் சமூகத்தில் உயரிய அந்தஸ்தை பெற்றிருந்தாலும் பணக்கார குடும்பம் அல்ல.

சிறுவயதிலேயே அறிவுக்கூர்மையும், ஆழமான சிந்தனைத் திறனும் பெற்றவராக கலிலியோ விளங்கினார். ஆரம்பத்தில் மருத்துவத்துறையில் பயின்ற இவர் பின்னர் தனக்குப் பிடித்த கணிதத்துறையில் பயின்றார். அவர் தனது பதினேழு வயதில் பிசா (University of Pisa) பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கணிதமும், இயற்பியலும் கற்றார். இங்கு கற்பிக்கப்பட்ட அறிவியல் கருத்துகளை மற்ற மாணவர்கள் அப்படியே ஏற்றுக்கொள்ள, கலிலியோ மட்டும் அதற்கான ஆதாரங்களை கேட்பார். இதனால் ஆசிரியர்களின் கண்டனங்களுக்கு உள்ளானார். ஒருமுறை வெவ்வேறு எடையுடைய இரண்டு பொருட்களை உயரத்திலிருந்து

கீழே போடும் போது அதிக எடையுடைய பொருள் முதலிலும், எடை குறைந்த பொருள் பின்னரும் தரையில் விழும் என்ற அரிஸ்டாட்டிலின் கருத்து மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. அப்பொழுது விஞ்ஞான கருத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கு முன் அது அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட வேண்டும் என்பதை விரும்பிய கலிலியோ அரிஸ்டாட்டிலின் கூற்றை மறுத்தார். இது பலரது கண்டனத்துக்கும் உள்ளானது. எனினும் பட்டம் பெற்ற பிறகு தமது 25-ஆவது வயதில் அதே பல்கலைக்கழகத்தில் கணித ஆசிரியராக சேர்ந்த போது மாணவனாக இருந்து செய்ய முடியாததை ஆசிரியராக இருந்து செய்வோம் என்று தீர்மானித்த அவர் அரிஸ்டாட்டிலின் கூற்றை பொய் என்று நிரூபிக்க விரும்பினார். நிறைய பார்வையாளர்களை அழைத்து பிசாவின் சாய்ந்த கோபுரப் பகுதிக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவர் அக்கோபுரத்தில் ஏறி நின்று இருவேறு எடையுடைய இரண்டு உலோக குண்டுகளை ஒரே நேரத்தில் கீழே போட்டார். இரண்டு குண்டுகளும் ஒரே நேரத்தில் சமமாக தரையில் விழுந்தன.

ஓர் எளிய அறிவியல் உண்மையை கண்கூடாக நிருபித்த போது அங்கிருந்தவர்கள் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்றும், இயற்கைக்கு மாறானது என்றும் கூறி நம்ப மறுத்தனர். அத்தோடு அவரை மந்திரக்காரன் என்றும் கூறினர். இதனால் கலிலியோவால் பிசா பல்கலைகழகத்தில் தொடர்ந்து பணியாற்ற முடியவில்லை. எனவே University of Padua பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக சேர்ந்தார்.



வானியல் ஆய்வில் அதிகம் ஆர்வம் கொண்ட கலிலியோ 1609-ஆம் ஆண்டில் telescope எனப்படும் உலகின் முதல் தொலைநோக்கியை உருவாக்கினார். அதைக் கொண்டு தினமும் விண்வெளியை ஆய்வு செய்தார். அதன்பலனாக விண்வெளியில் அதிசயிதக்க பல கண்டுபிடிப்புக்கு சொந்தக்காரர் ஆனார். முதலில் சனி கிரகத்தை சுற்றியுள்ள வளையத்தை கண்டுபிடித்தார். பின்னர் வியாழன் கோளுக்கு நான்கு துணைக்கோள்கள் அதாவது நான்கு நிலாக்கள் இருக்கின்றன என்பதை கண்டுபிடித்து சொன்னார். இந்த நிலாக்கள் தற்போது ஐயோ, ஐரோப்பா, கேனிமெட் மற்றும் கால்லிச்டோ என்று அழைக்கப்படுகின்றன. சூரியனில் கரும்புள்ளிகள் தெரிவதையும் அவர் கண்டார். அந்தப்புள்ளிகள் என்னவாக இருக்கும் என்று சிந்தித்தபோது அவை சூரியனை சுற்றும் கிரகங்களாகத்தான் இருக்க வேண்டும் என்று அனுமானித்தார். சூரியனை சுற்றியே அனைத்தும் சுழல்கின்றன என்ற தனது கருத்தை அதன்மூலம்தான் உறுதி செய்தார் கலிலியோ. ஏற்கனவே Copernicus என்பவர் சொன்ன கருத்தை அதற்கான ஆதாரத்துடன் நிருபித்தவர் இந்தக் கலிலியோதான். அந்தக்கருத்தை சிலர் ஏற்றாலும், பழமைவாதிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

1593இல் கலிலியோ ஒரு வெப்பமானியை உருவாக்கினார். ஒரு விளக்கில் உள்ள காற்றின் விரிவடைதல் மற்றும் சுருங்குதலை பயன்படுத்தி அதனுடன் ஒரு குழாயை இணைத்து அதில் நீரில் இயக்கத்தை உருவாக்கி இச்செயலை அவர் சாத்தியமாக்கினார்.

1615-ஆம் ஆண்டு கலிலியோ தமது கண்டுபிடிப்புகளையும், சூரியன்தான் பிரபஞ்சத்தின் நடுநாயகம் என்ற கருத்தினையும் ஒரு புத்தகமாக வெளியிட்டார். இது கிறிஸ்தவ மதக் கருத்துக்களிலிருந்து வேறுபடுகின்றது எனக் கூறி அந்நாடு இவரை கைது செய்து பின் விடுதலை செய்தது. இதனால் பிரான்ஸ்க்கு குடிபெயர்ந்த கலிலியோ தொடர்ந்து ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். ஆண்டு செல்ல செல்ல பூமிதான் சூரியனை சுற்றுகிறது என்ற கருத்தில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டது.

ப்ளோரன்ஸ் (Florence) நகர அதிகாரிகளின் அனுமதியோடு 1632-ஆம் ஆண்டில் அவர் மற்றொரு புத்தகத்தை வெளியிட்டார். மீண்டும் தேவாலயத்தையும் மதத்தையும் அவமதிக்கிறார் என்றுகூறி ரோம் நகர உயரதிகாரிகள் அவரை மீண்டும் கைது செய்தனர். இம்முறை விடுதலை என்ற பேச்சுக்கே இடமில்லாமல் அவரை வீட்டுக்காவலில் வைத்தனர். அப்போது அவருக்கு வயது 68. பத்து ஆண்டுகள் வீட்டுக்காவலிலேயே காலத்தை கழித்த கலிலியோ 1642-ஆம் ஆண்டு அதாவது 1642 ஜனவரி 8 இல் காலமானார். அப்போது அவருக்கு வயது 78. அவர் இறந்த பிறகு அவரது ஆராய்ச்சிகளையும், கண்டறிந்த உண்மைக ளையும் உள்ளடக்கிய புத்தகம் ஐரோப்பா முழுவது விற்பனையாகி பழமைவாதத்தில் சிக்காத சிலரின் அறிவுக்கண்ணை திறந்தது.


கலிலியோ 1610இல் சைட்ரஸ் நுன்சியஸ் (விண்மீன்கள் தூதன்) என்ற ஆய்வு கட்டுரையில் தனது ஆரம்ப தொலைநோக்கி வானியல் ஆய்வுகளை வெளியிட்டார்.

1632 ஆம் ஆண்டில் உலகத்தின் முதன்மையான இரு முறைமைகளைப்பற்றிய உரையாடல் என்னும் தலைப்பிலும், 1638 ஆம் ஆண்டில் அவரது கண்பார்வை பெரிதும் மங்கிய நிலையில், புதிய அறிவியலைச் சார்ந்த இரு உரையாடல் என்னும் தலைப்பிலும் மிகச் சிறந்த நூல்களை எழுதி வெளியிட்டார். அந்நூல்களை அடிப்படையாகக்கொண்டே அறிவியல் அறிஞர் ஐசக் நியூட்டன் தம்முடைய கொள்கைகளை உருவாக்கினர். இவர் மறைந்தாலும் இவரது அறிவியல் கொள்கைகளும் அது சார்ந்த நூல்களும் அறிவியல் உலகத்தின் ஆராச்சிகளுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

**09. 12வது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள்**

12வது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் 2019 மே 30 தொடக்கம் யூலை 14 வரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸிலில் அமைந்துள்ள 10 நகரங்களிலுள்ள 11 மைதானங்களில் இடம் பெற்றது. இப்போட்டியில் கலந்து கொண்ட அணிகளும், அணித் தலைவர்களும்

| நாடு | அணித் தலைவர் |
|---|---|
| இங்கிலாந்து | இயன் மோர்கன் |
| இலங்கை | திமுத் கருணாரத்ன |
| இந்தியா | விராட் கோஹ்லி |
| பாகிஸ்தான் | சர்பராஸ் அஹமட் |
| ஆப்கானிஸ்தான் | குல்பதீன் நயீப் |
| அவுஸ்திரேலியா | ஆரோன் பின்ஞ்ச் |
| பங்களாதேஸ் | மஸ்ரபி மொர்தசா |
| தென்னாபிரிக்கா | பாப் டு ப்ளெசிஸ் |
| நியூசிலாந்து | கேன் வில்லியம்சன் |
| மேற்கிந்திய தீவுகள் | ஜேசன் ஹோல்டர் |



**இறுதிப் போட்டி**

2019 யூலை 14 அன்று இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் இடம் பெற்றது. இதில் இங்கிலாந்து மற்றும் நியூஸ்லாந்து அணிகள் பங்குபற்றினர். நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸ்லாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டது. குறித்த 50 பந்துப் பறிமாற்றங்களின் முடிவில் இவ்வணி 241 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியும் குறித்த 50 இலக்கு களின் முடிவில் 241 ஓட்டங்களைப் பெற்றது. இரு அணி யினரதும் ஓட்ட எண்ணிக்கைகள் சம மாக இருந்தமையால் இரு அணிகளுக்கும் மேலதிகமாக தலா ஒரு பந்துப் பரிமாற்றம் (சுப்பர் ஓவர்) வழங்கப்பட்டது. இதிலும் இரு அணிகளும் தலா 15 ஓட்டங்களைப் பெற்றன. இதனால் அடிக்கப்பட்ட பவுண்ரிகளின் அடிப்படையில் ஒரு பவுண்ரியினை மேலதிகமாகப் பெற்ற இங்கிலாந்து அணி வெற்றியினை சுவிகரித்துக் கொண்டது.

**13வது உலகக் கிண்ணம்**

இவ்வுலகக்கிண்ணப் போட்டிகள் எதிர்வரும் 2023 பெப்ரவரி 9 தொடக்கம் மார்ச் 26 வரை இந்தியாவில் இடம் பெறவுள்ளது. இதன் இறுதிப் போட்டி 2023 மார்ச் 26 மும்பையில் நடைபெறவுள்ளதாக ஐ.சி.சி அறிவித்துள்ளது.

**10. தாடியுள்ள பென்குயின்**

**(Pygoscelis antarctica)**

உயிரியல் வகைப்பாடு

திணை: விலங்கினம்

தொகுதி: முதுகுநாணி

வகுப்பு: பறவை

வரிசை: பென்குயின்வடிவி

குடும்பம்: பென்குயின்வகையி

Bonaparte - 1831 பேரினம்



பென்குயின் நீரிலும் நிலத்திலும் வாழக் கூடிய ஓர் பறவையினம் ஆகும். இவற்றில் 17 வகை உள் ளன. இவற்றில் மிகப் பெரியது பேரரசப் பென்குயின், மிகச் சிறியது நீலப் பென் குயின் (தேவதைப் பென்குயின்) ஆகும். பென்குயின்கள் பெரும்பாலும் தெற்கு அரைக் கோளத்தில் மட்டுமே வாழ்கின்றன. எனினும் ஒரே ஒரு பென்குயின் இனம் மட்டும் நடுநிலக் கோட்டின் வடக்குப் பகுதியில் வாழ்கின்றது. பனிப்பாறைகள் நிறைந்த குளிர் பிரதேசங்களில் இவை வாழ்கின்றன. பொதுவாக தெற்கு அட்லாண்டிக், அண்டார்டிகா, பசிபிக் கடற்கரைகள்

மற்றும் ஆஸ்திரேலியா, ஆப்பிக்கா, தென் அமெரிக்கா, பெரு, நியூசிலாந்து போன்ற நாடுகளின் கடற்கரை பிரதேசங்க ளிலும் இவை வாழ்கின்றன.

நீந்துவதற்கு ஏதுவான உடல் அமைப்பை கொண்டுள்ள பெண்குயின்கள் மிக வேக மாக நீந்த வல்லன. இவை நீரில் நீந்தும் போது பறப்பது போல் காட்சியளித்தாலும், இவற்றால் பறக்க முடிவதில்லை. நீந்தும் போது இரு இறகுகளும் துடுப்பு போன்று செயற்படுகின்றது. பென் குயின்கள் மணிக்கு 6 தொடக்கம் 12 கிலோமீட்டர் வரை நீந்த வல்லன. சில பெண்குயின்கள் மணிக்கு சுமார் 25 கிலோமீட்டர் வேகம் வரை நீந்தக் கூடியவை. இவை தமது வாழ்நாளின் 75 சதவித காலத்தை உணவுத் தேடலுக்காக நீருக்கடியில் கழிக்கின்றன. இவற்றின் கண் களின் கீழ்ப் பார்வை சிறப்பாக இருப்பதனால் நீரின் அடியில் உள்ள உணவுகளை எழிதாகக் கண்டறிய முடிகின்றது. இவை மீன், இறால் என்பனவற்றை விரும்பி உண்கின்றன. இவற்றால் நீருக்கடியில் சுவாசிக்க முடியாது ஆனாலும் அதிக நேரம் மூச்சை அடக்கிகொள்ளும் திறனுடையது. பெண்குயின்கள் வேகமாக ஓடும் இயல்பினையும் கொண்டுள்ளன.

பெண்குயின்கள் சிறிதான கழுத்தையும், கனத்த உடம்பையும், சிறிய வாலையும், வளைந்த அலகையும் கொண்டுள்ளன. இவற்றின் செவிப்புலன் மிகச் சிறப்பானது. இதன் உட லில் மூன்று அடுக்குச் சிறகுகள் காணப்படும். இதில் தினசரி 150 கிராம் சிறகுகள் வரை உதிர்ந்து விடுகின்றன. மீண்டும் 12 நாட்களில் சிறகுகள் முளைத்து விடும். இச்சிறகுகள் தான் இப் பறவைகளை கடும் குளிரிலிருந்து பாதுகாக்கின்றது. மேலும் இவை கூட்டமாக நின்றும் தமது உடல் வெப்ப நிலையை சரி செய்கின்றன. இதன் உடலின் அடிபகுதியில் கொழுப்பு நிறைந்து காணப்படும். கடல் நீரில் மட்டுமே வாழும் இயல்புடைய இப் பெண்குயின்கள் உப்பு நீரை அருந்தும் போது இப் பறவையின் உடலில் உள்ள ஒரு சுரப்பியானது உப்பை பிரித்து வெளியேற்றுகின்றது. பென்குயின்களின் உடலில் கீழ்ப்பகுதி வெண்ணிறமாகவும், மேற்பகுதி கறுப்பு நிறமாகவும் காணப்படுகின்றது. இது திமிங்கிலம் அல்லது சிறுத்தை நீர்நாய் போன்ற விலங்குகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கின்றது. சீல்கள் தான் இதன் முதல் எதிரி.

பெண்குயின்கள் இணைந்து பாடி தம் துணையைத் தெரிவு செய்கின்றன. இத் தெரி விற்கு சில வேளைகளில் வருடகணக்கான காலம் கூட ஆகலாம். தேர்ந்தெடுத்த துணைகள் தம்மை அடையாளப்படுத்தவும், குஞ்சுகளை அடையாளப்படுத்தவும் இக்குரல் ஒலியையே பயன்படுத்துகின்றன. புதர்களும் மரங்களும் சூழ்ந்த கடற்கரை பிரதேசத்தில் பெண்குயின்கள் இணை சேர்ந்து முட்டையிடுகின்றன. பொதுவாக இவை இரண்டு முட்டைகளை இட்டு 30 முதல் 60 நாட்கள் வரை தமது கால்களின் இடையில் வைத்து அடைகாக்கின்றன. இக் காலப் பகுதியில் பெண் பறவை இரைதேட செல்லுமிடத்து ஆண்தான் அடைகாக்கும். சில நேரங் களில் பெண் பறவை திரும்பி வர இரண்டு வாரங்கள் கூட ஆகலாம். குஞ்சு பொரித்து வெளியே வந்து கத்தும் போது அதன் குரலை கேட்டு பெற்றோர்கள் அடையாளம் கண்டுகொள்வர். குஞ்சுகள் ஓரளவு வளர்ந்ததும் அவற்றை கூட்டத்திலுள்ள பறவைகளிடம் ஒப்படைத்து விட்டு தாய் தந்தைப் பறவைகள் கடலுக்குள் சென்று உணவு தேட ஆரம்பிக்கும். பொதுவாக இப்பறவைகளுக்கு சரியான பாதுகாப்பு முறை கிடையாது.

# எழுதுங்கள் வெல்லுங்கள்

### போட்டி இல. 23 வினாக்கள்

- இலங்கையின் தேசிய பறவை எது?
- சுவிஸ்லாந்து நாட்டின் நாணயத்தின் பெயர் யாது?
- படைப்புழுவின் அறிவியல் பெயர் யாது?
- நவாலியூர் சோமசுந்தரப்புலவர் எப்போது பிறந்தார்?
- 12வது உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது?
- மாற்றுத்திறனாளிகளுக்கான 5000M ஓட்டப்போட்டியில் 3 முறை உலக சம்பியன் பட்டத்தைப் பெற்ற பார்வையற்ற அமெரிக்கப் பெண்மணி யார்?
- சர்வதேச டவுண்சிண்ட்ரோம் (மனநலிவு) தினம் எப்போது அனுஸ்டிக்கப்படுகின்றது?
- இயலாமையுடன் கூடிய ஆட்களின் உரிமைகள் மீதான சமவாயத்தின் சுருக்கக் குறியீடு யாது?
- இலங்கையில் உடல் ஊனமுற்றோருக்கான கல்விச் சிந்தனைக்கு முதலில் செயல் வடிவம் கொடுத்த பெண்மணி யார்?
- இலங்கையில் எத்தனையாம் ஆண்டு எந்த அறிக்கையில் பார்வையற்றோருக்கு பிரைய்ல் மொழியை பயன்படுத்தி கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளவும், செவிப்புல வலுவிழந்தவர்களுக்கு உதட்டு வாசிப்பு முறையில் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**இவ்வினாக்களுக்கான சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதி எதிர்வரும் நவம்பர் 30,2019ம் திகதிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.**

## எழுதுங்கள் வெல்லுங்கள்

### போட்டி இல. 23 விடைகள்

01. ..............................
02. ..............................
03. ..............................
04. ..............................
05. ..............................
06. ..............................
07. ..............................
08. ..............................
09. ..............................
10. ..............................

### போட்டி இல:22 விடைகள்

**இல 22ன் விடைகள்**

1. கொழும்பு, ஹம்பகா, களுத்துறை
2. ஊசியால் குத்துதல்
3. வசிட்ட முனிவர்
4. 33 நாட்கள்
5. இராவணா -1
6. வைக்கம் விஜயலட்சுமி
7. ஆன் சலீபன்
8. ஏப்ரல் -02
9. ரஸ்மி இமேஸா குணவர்த்தன
10. 1912 இரத்மலானை விழிப்புல செவிப்புலன் அற்றோர் பாடசாலை.




1. முழுப் பெயர் : ..............................
2. தபால் முகவரி : ..............................
..............................
3. தொலைபேசி இல : ..............................
4. பிறந்த ஆண்டு மாதம் திகதி : ..............................

**அனுப்ப வேண்டிய முகவரி :** எழுதுங்கள் வெல்லுங்கள்
**கருவி**, மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்
இல : 1166/15, அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

# முற்றத்து மல்லிகை

நேர்காணல் : கணபதி சர்வானந்தா

## பல அறிவு நெஞ்சங்களின் அன்புக்குரியவராக இரத்தினம் ராஜரட்ணம்!



யாழ். மாநகரத்தின் அடையாளங்களில் ஒன்றாகக் காணப்படுவது யாழ்.பொது நூலகம். எரியூட்டப்பட்ட பின்னர் புனரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவோடு காணப்படுகிறது. தினமும் நூற்றுக் கணக்கான வாசகர்கள் யாழ். நூலகத்தை நோக்கி வந்து போகின்றனர். கல்விக் களஞ்சியமாக மட்டுமல்ல, பல கற்றோர்களை ஒன்றிணைக்கின்றதொரு தளமாக யாழ்.நூலகம் விளங்குகிறது. அந்த யாழ். நூலகத்தினுள் செல்லுமுன் நீங்கள் கட்டயமாகச் சந்திக்க வேண்டியவர் இவர். நூலகத்து வாயிலில் புன் சிரிப்போடு உங்களை முதலில் வரவேற்பவர் இவர். நீங்கள் உங்கள் உடமைகளை இவரிடமே ஒப்படைத்து விட்டு அமைதியாகவும், பொறுமையாகவும் உள்ளிருந்து உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டு வரலாம். அதுவரை அதனைப் பொறுப்போடு பாதுகாத்துக் கொடுக்கின்றார். அங்குவரும் பல நூலக வாசகர்கள் அவருக்கும் நண்பர்கள். அவர் பெயர் இரத்தினம் ராஜரட்ணம். அவர் ஒரு மாற்றுத் திறனாளி. யாழ்.மாநகரசபை சுகாதரப் பிரிவில் கடமையாற்றுகிறார்.

இளம் பிள்ளைவாத நோயினால் இவர் பாதிக்கப்பட்டபோது இவருக்கு மூன்று வயது.1965 இல் சேமமடு முதலாம் யுனிற்றில் பிறந்த இவரை தாய், தந்தையர் மிகவும் கவனமாக வளர்த்தனர்.அங்குள்ள மகாவித்தியாலயத்திலேயே இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்கத் தொடங்கினார்.ஏழாவது வகுப்புவரை அங்கு கற்றபின் கிளிநொச்சி குருகுல விடுதியில் இருந்து கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் மேற்படிப்பைத் தொடர்ந்து க.பொ.த சாதாரணம் வரை கற்றவர். இவரது தந்தை ஒரு கமக்காரர். தாய் குடும்பப் பெண். இவருக்கு நான்கு உடன் பிறப்புகள்.

வன்னியில் இருந்து வட்டுக்கோட்டை மேற்குப் பகுதிக்கு இடம் பெயர்ந்து அங்கு சில காலம் வாழ்ந்தவர். இவர் 1995 இல் யாழ். மாநகர சபையில் ஒரு தற்காலிகப் பணியாளராக

இணைந்து கொண்டவுடன் இடம்பெயர்வைச் சந்தித்தவர். 2003 இல் மீள வந்து யாழ். குடாநாட்டில் குடியேறியவருக்கு உடனடியாக பணிசெய்யச் சந்தர்பம் கிட்டவில்லை. சில காலத் தின் பின்னர் மீண்டும் யாழ். மாநகர சபையில் பணி செய்யத் தொடங்கி 2008 இல் நிரந்தர ஊழியராக்கப்பட்ட பின்னர் யாழ்.மாநகர சபையில் பல பிரிவுகளில் கடமையாற்றச் சந்தர்பம் கிட்டியது என்கிறார். நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த போது இவருக்கு நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தில் ஒரு நிரந்தர வீட்டைப் பெற்றுக் கொள்ள உதவியதாக இருந்ததாக அவரை நினைவு கூருகிறார். அதுவே தனக்குப் பெரிய ஆறுதலான விடயம் என்கிறார் இரத்தினம் ராஜரட்ணம்.

அவர் குடும்ப வாழ்க்கை பற்றிக் கேட்டோம். "நான் திருமணமாகி மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். இரண்டு பெண்கள். ஒரு ஆண் குழந்தை. மனைவியே குடும்பத்தைப் பராம ரிக்கிறார். இறை அருளால் எனது இரு பெண் பிள்ளைகளும் திருமணமாகி குடும்ப வாழ்க் கைக்கு உட்பட்டுவிட்டனர். மகன் படிக்கிறான். பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுப்பதற்காக நான் வங்கியில் கடன் பெற்று இன்னும் கடனை இடைத்துக் கொண்டுதான் இருக்கிறேன். எனக்குக் கிடைக்கும் சம்பளத்தில் வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் போக மாதம் ரூபா.ஐயாயிரம் மட்டுமே மீதியாகிறது. வாழ்க்கையை எந்தவித தடங்கலுமில்லாது முன் கொண்டு செல்ல வேண்டுமே என்பதற் காக எனக்குத் தெரிந்த இன்னும் ஒரு தொழிலை யும் செய்து வருகிறேன். அதற்குக் குடும்பத்தி னர் உதவியாக இருக்கின்றனர். மரக்கன்று களை விதை போட்டு வளர்த்து, பதி வைத்து விற்பனை செய்கிறேன். அன்று தொட்டு அதை விடாமல் எனக்கு இன்னுமொரு ஆதாராமாக வைத்துக் கொண்டு வருகிறேன். மாநகர சபையில் வேலை கிடைக்க முன்னரும், வன்னி யில் இருந்த காலப் பகுதியிலும் இதனையே செய்து வந்தேன். இதனை எனது ஆரம்பத் தொழில் என்றும் சொல்லலாம்.



என்னவாக இருந்தாலும் இந்தத் தொழில் எனக்குச் சந்தோஷத்தைத் தருகிறது. ஒரு அறிவு சார்ந்த இடம். நிரந்தரமாக வருபவர்கள் பலர் உண்டு. புதியதாகவும் வருகின்றனர். பல மாணவர்கள் தமது கல்வித் தேவைக்காகக் குறிப்பெடுக்கவும், போட்டோ பிரதி எடுக்கவும் வருகின்றனர். அத்துடன் பல பிரமுகர்களும் வருகின்றனர். அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பும் எனக்குக் கிடைக்கிறது. என்னிடம் உடமைகளை வைத்துவிட்டுச் செல்லவருகின்ற



வர்கள் பெரும்பாலும் என்னோடு நல்லமுறையில் நடந்து கொள்வார்கள். ஒரு சிலர் முரண் படுவதும் உண்டு. அப்போது எம்மோடு பணி யாற்றும் சக ஊழியர்களை அவர்களைச் சமா ளிப்பர். இங்கு பணி செய்யும் அனைவரும் எனக்கு உதவுகின்றனர். அன்பாக நடந்து கொள்கின்றனர் -என்று தனது அனுபவங்களை எம்மோடு பகிர்ந்து கொண்டார் இரத் தினம் ராஜரட்ணம்.

இரத்தினம் ராஜரட்ணத்தை யாழ்.நூலாகத்திலே அவர் கடமையாற்றுகின்றபோதே சந்திக்க வாய்ப்புக் கிட்டியது. எம்மோடு பேசிக்கொண்டு தனது கடமையிலும் கண்ணாக விருந்தார். அவர் தனது இருக்கையில் அமர்ந்து பணி செய்கின்றபோது அவரை ஒரு மாற்றுத் திறனாளியாக அடையாளங் காண்பது அரிது. அவர் தனது போக்குவரத்துக்காகஅவருக்கென அனுமதி பெற்று மாற்றியமைக்கப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிளையே உடன் வைத்திருக் கிறார். அதன் உதவியோடு தனது அலுவகப் பணிக்கு வந்து போகிறார்.

இரத்தினம் ராஜரட்ணம் தான் ஒரு மாற்றுத் திறனாளியாக இருந்தாலும் சமூகத்தில் சாதாரணமானவர்களிலும் விட மென் மேலும் உயர வேண்டும் என்ற எண்ணத்தோடு உழைப்பது தெரிகிறது. அவர் இயற்கையை நேசிக்கிறார். அதனால்தான் அவர் சூழலை அலங்கிரிக்கின்ற அதே சமயம் மானிட வாழ்வாதாரத்துக்குப் பெரும் பங்காற்றுகின்ற மரங் களை வளர்க்க வேண்டும் என்றும் அதையே தனது வாழ்வாதாரமாகவும் செய்துவருகிறார். இரத்தினம் ராஜரட்ணம். அவர்கள் சூழலைப் பற்றிச் சிந்திப்பதுபோல நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமானால் காடுகள் பெருகி மானிட வாழ்வு நலம் பெருகும். வாழ்வு மேலோங்கும்.

இரத்தினம் ராஜரட்ணம் கருவியில் அங்கத்தவராக இருக்கிறார். இவர்கள் போன்று உழைத்து சுயமரியாதையோடு எத்தனையோ மாற்றுத் திறனாளிகள் சமூகத்தில் இருக்கி றார்கள். அவர்களில் பலருக்குத் "தொடக்கம்" ஒன்று அவசியப்படுகிறதைப் பல சந்தர்பங்களில் நாம் அடையாளங் கண்டுள்ளோம். அவர்கள் வாழ்வாதாரத்தைத் தொடங்க ஒரு உந்துதலைக் கொடுத்தால் அவர்கள் தொடர்ந்து இயங்கக் கூடிய ஆற்றலுள்ளவர்களாகக் காண்கிறோம். அப்படியான பலரின் விபரங்கள் கருவியில் உண்டு. மனித நேயமுள்ளவர்கள் கருவியோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு உதவலாம்.



# உணர்திறன் மிக்க கைகள் உருவாக்கத்தில் வெற்றி கண்டவர் துசாபன்!

வளர்ந்துவரும் தொழில் நுட்ப உலகில் பல புதிய உருவாக்கங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. புதிய வரவுகள் சூழலை நிரப்பிகின்றன. அவற்றுள் தமக்குரிய அத்தியாவசியப் பொருட்களைத் தமது வசதிக்கேற்ப வடிவமைத்துக் கொள்வதில் ஆர்வம்மிக்கவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் சமூக அக்கறை கொண்டவர்களாகவும் இருப்பதைக் காண்கிறோம். அப்படிப்பட்ட பொறுப்புணர்வு மிக்கவர்களின் முயற்சிகளை கண்டறிந்து அவற்றுக்கு நாம் கைகொடுப்போம் என்கிறார் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.

அப்படிப்பட்ட ஒரு வினைத்திறனுள்ள மாணவனாக அடையாளம் காணப்பட்டவர் துசாபன் பத்மநாதன் அவர் மாற்றுவலுவுள்ளோருக்கான உணர்திறன் முறையுடனான செயற்கை கையினை உருவாக்கி அதில் வெற்றி கண்டுள்ளார். அவர் உருவாக்கியுள்ள கைகளைப் போல தயாரிப்புகள் ஏலவே, உலகச் சந்தையில் காணப்பட்டாலும் அவரது தயாரிப்பிலுள்ள தனித்துவம் என்ன வென்றால் எமது மண்ணில் உள்ளவர்களினால் அதனை வாங்கிப் பொருத்தக் கூடியவாறு அதன் பெறுமதி மிகக்குறைவு என்பதாகும். சாதாரணமாக உலகச் சந்தையில் அதன் விலை பல இலட்சம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவியை சேர்ந்த பத்மநாதன் துசாபன் என்ற அந்தப் பல்கலைக்கழக மாணவனின் கண்டுபிடிப்பினை கௌரவிக்கும் முகமாகக் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அமைச்சின் செயலகத்தில் 02.10.2019 அன்று இடம் பெற்ற சந்திப்பில் ஆளுநர் அந்த மாணவனைப் பாராட்டிக் கௌரவித்ததோடு பாராட்டுப் பத்திரத்தினையும், நினைவுப் பரிசினையும் வழங்கி அவரை மேலும் உற்சாகப்படுத்தியுள்ளார்.

மேலும் அந்த மாணவன் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில் நுட்பதுறையில் இரண்டாம் வருட கல்வியினை தற்போது தொடர்வதனை கருத்தில் கொண்டு மாணவனின் பட்டப்படிப்பின் பின்

கண்டுபிடிப்பினை விரிவாக்கும் பொருட்டு வடமாகாண ஆளுநரின் பணிப்புரையில் மாணவனுக்கு வெளிநாட்டில் மேற்படிப்பினை தொடர்வதற்காக புலமைப்பரிசில் மற்றும் குறித்த ஆராய்ச்சியை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் நிதிஉதவியும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் வடமாகாணத்தில் மாற்றுவலுவுள்ளோருக்கான தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு 25 உணர்திறன் கைகள் மாணவனின் மேற்பார்வையில் உருவாக்கப்படுவதற்கான நடவடிக்கையை ஆளுநர் மேற்கொண்டுள்ளதாக ஆளுநரின் ஊடகப்பிரிவு தெரிவித்திருக்கிறது.

அது பற்றி துசாபனிடம் சில தகவல்களைக் கேட்டோம். அவருக்குச் சிறு வயதிலேயே இது போன்ற பொறிகளை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்திருக்கிறது. அதனால்தான், தானொரு பொறியியலாளராக வரவேண்டும் என்று கனவு கண்டாராம். இவர் ஆரம்பக் கல்விதொட்டு உயர்தரம்வரை பல பாடசாலைகளில் கற்றிருக்கிறார். அப்போது காணப்பட்ட யுத்தமும் அது சார்ந்த இடப்பெயர்வுகளும் இவரை அது போன்றதொரு சூழ்நிலைக்குத் தள்ளியுள்ளது. இருந்தும் இவர் கல்வி கற்கும் காலத்திலும் தமது தேடலைத் தொடங்கியிருக்கிறார். ஆரம்பத்தில் சிறிய பொறிகளை உருவாக்குவதில் இவர் வெற்றி கண்டுள்ளார். அப்போது இவருக்கு அத்துறைசார்ந்த ஆர்வமுள்ள நிலவன் என்ற பெயருடையதொரு நண்பன் இருந்ததாகவும் அவனே தன்னை இத்துறை சார்ந்து சிந்திக்கத் துண்டியவன் என்றும் துசாபன் தெரிவிக்கிறார்.

பின்பு யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னால் அவருக்குக் கிடைத்த இணைய வசதிகளில் அவர் இத்துறைசார்ந்த பல விடயங்களை யூ-ரியூப்பின் மூலம் அறிந்து கொண்டார். பல பொறிகளையும், பொறி முறைகளையும் அறிவதற்கு இணையம் இவருக்கு உதவியிருக்கிறது. அதிலே இவர் கண்ட இயந்திர மனிதனின் உருவாக்கம் பற்றியதொரு விடயமே இவரை செயற்கைக் கைகளை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியுள்ளது. இருந்தாலும் இவருக்கு இருந்த நிதிப் பற்றாக்குறையினால் இவரின் இது போன்ற முயற்சிகள் தடைப்பட்டிருக்கின்றன. இருந்தும் இவரின் அயராத உழைப்பினாலும், விடாமுயற்சியினாலும் இவர் தனது உருவாக்கத்தில் வெற்றி கண்டுள்ளார்.

தனது சூழலில் இருக்கின்ற தனது தந்தைக்கு அறிந்த மாற்றுத் திறானாளி களுக்கு இவற் றைப் பொருத்திப் பரிசோதித்ததில் தான் பரிபூரண திருப்தி அடைந்துள்ளதாகவும், தனது கல்வியின் பின்னர் தான் செயற்கை கைகளின் உருவாக்கத்தைத் தொடரவுள்ளதாகவும் அவர் மேலும் சொல்லி இருக்கிறார்.

இது போன்று சமூகம் சார்ந்து, மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு சிந்திப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆளுநர் தெரிவித்திருப்பதைப் போல அவர்களை இனங்கண்டு அவர்களின் இது போன்ற உருவாக்க முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதோடு அவர்களைச் சமூக வெளிச்சத்துக்குக் கொண்டு வருவோமானால் எமது வீடும், நாடும் நலம்பெறும் என்பதில் ஐயமில்லை.

●

## சிறுகதை

# அஸ்தமித்தது சூரியன்

அந்த நாளை என்னால் இதுவரை மறக்க முடியவில்லை. சம்பவம் நடந்து இன்று ஐந்து வருடங்களாகிறது. அப்போது எனக்கு வயது பதின்மூன்று. எட்டாம் தரம் அரசுப் பாடசாலை ஒன்றில் படித்துக் கொண்டிருந்தேன். அன்று தான் பாடசாலை முதல் நாள்....

குமார், திவ்யா எழும்பவில்லையா மணி ஆறு ஆகிவிட்டது என்று அம்மா எங்களை எழுப்பிவிட்டு உள்ளே உணவு தயாரிக்க ஆரம்பித்தார். சற்று கழித்து மீனாட்சி பிள்ளைகள் எழும்பிவிட்டார்களா? பாடசாலை போக வேண்டும் என்றார் அப்பா. நானும் தங்கையும் உடைகளைப் போட்டு இனிப்புக்களுடன் வெளியே வருகின்றோம். அப்பா துவிச்சக்கர வண்டியுடன் வெளியில் நின்று கொண்டிருந்தார். இருவரும் ஏறி இருந்தோம். அசைந்தாடும் நெற்கதிர்கள் இயற்கையோடு இணைந்த அழகை ரசித்த படியே எங்கள் பாடசாலைக்கு வந்துவிட்டோம். நண்பர்களைச் சந்தித்த மகிழ்ச்சி என்ன செய்வதென்று தெரியாமல் குதித்தேன். காலை ஒன்று கூடல் ஆரம்பமானது. மயில்வாகனம் ஆசிரியர் பேச ஆரம்பித்தார்.

அனைவருக்கும் வணக்கம் இன்று முதல் நாள் எல்லோரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். என்றவாறே இன்று எமது பாடசாலைக்கு புதிய ஆசிரியர் ஒருவர் நியமனம் பெற்று வந்திருக்கிறார். அவரை கைதட்டி வரவேற்போம். அப்போது யாவரும் கதைத்துக் கொண்டிருந்தோம் யார் அவர் யார் அவர் என்று அந்த ஆசிரியரும் வந்தார். ஆனால் அவரால் நடக்க முடியவில்லை. ஏனெனில்..... விபத்து ஒன்றில் அவர் அவரது இரு கால்களையும் இழந்ததாக கூறினார். எல்லோரும் கவலை அடைந்தோம். அன்று




கூடல் முடிந்தது. எல்லோரும் வகுப்பிற்குப் போகின்றோம். குமார் விடுமுறை எப்படி அதை ஏன் சுரேஸ் கேட்கிறாய் எல்லாம் நலம் உங்களை சந்திக்க முடியவில்லை மன்னித்து விடுங்கள் என்று மாறி மாறி அன்பை பகிர்ந்து கொண்டோம். அப்போது.. காலையில் பார்த்த ஆசிரியர் எங்கள் வகுப்பிற்கு தமிழ்ப்பாடம் கற்பிக்க வந்திருந்தார். எல்லோரும் வணக்கம் சொன்னோம். முதலில் அவரை அறிமுகப்படுத்தினார். பிள்ளைகளே எனது பெயர் கைலாசம் நான் வெளியூர் உங்க ளுக்கு தமிழ்ப்பாடம் கற்பிக்க வந்துள் ளேன் என்றார். அப்படியே எங்களையும் நாங்கள் அறிமுகப்படுத்தி னோம். ஆனால் யாரும் அவரைப் பார்த்து சிரிக்கவே இல்லை. அவரது நிலையை நாங்கள் மறந்தோம் அன்பாய் பழகினோம். எனக்கு அவரை ரொம்பவே பிடித்து விட்டது. கைலாசம் ஆசிரியர் பற்றி பெருமைப்பட்டேன். தன் நிலையிலும் அவரது பற்றும், பண்பும் அனைவரையும் கவர்ந்தது. இப்படியே மூன்று மாதங்கள் கடந்தது. அன்று எமது

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி நான் எந்தப் போட்டியிலும் பங்குபற்றவில்லை. கைலாசம் ஆசிரியர் குமார் என்னவாயிற்று ஏன் விளையாடவில்லை. பிடிக்கவில்லை சார். சாதனை படைக்க நினைக்கிறேன் ஆனால் முடியவில்லை. அப்படி இல்லை குமார் ஊனமுற்றவர்கள் கூட வாழ்வில் எத்தனையோ விடயங்களை சாதித்துவிட்டார்கள். சாதித்துக் கொண்டும் உள்ளார்கள். உன்னால் முடியும் என்றார். நான் சரிசார் அடுத்த முறை பார்க்கலாம் என்றுவிட்டேன். இவ்வாறே நாட்கள் ஓடின அன்று.....

ஆசிரியர் தினம், நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கிறது. மனதில் கவலை எல்லா ஆசிரியர்களும் ஆடுகிறார்கள், பாடுகிறார்கள் கைலாசம் ஆசிரியரை மட்டும் காணவில்லை. அப்போதுதான் கரகோசம் அதிகமாகியது திரும்பிப் பார்த்தேன். கைலாசம் ஆசிரியர் ஆடிக் கொண்டு இருக்கின்றார். என்னால் சந்தோசத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை அழுதுவிட்டேன். அன்று தான் அவர் சொன்னார். குமார் இன்று கால் இல்லை என்று நான் ஆடாமல் இருந்திருந்தால் இப்படி பாராட்டு எனக்குக் கிடைத்திருக்காது. ஊனம் என்பது குறையல்ல என்றார் மாற்றுத்திறனாளியாலும் சாதிக்க முடியும் என்பதனை அவர் காட்டிவிட்டார். அவரைத் தொடர்ந்தே நானும் விளையாட்டில் பதக்கம் பெற்று வெற்றிகளை நிலைநாட்டினேன். இன்று நான் ஒரு சிறந்த உதைப்பந்தாட்ட வீரன். இதற்குக் காரணம் மாற்றுத்திறனாளியான எனது கைலாசம் ஆசிரியர் தான்.

**இ.நவனீதன்,**
பிள்ளையார் கோயில் வீதி,
சித்தாண்டி - 01
மட்டக்களப்பு.




# கருவி சைன்

**கருவியின் தயாரிப்பான கருவி சைன் திரவ சலவை சவர்க்காரத்துக்கு நீங்கள் தரும் ஆதரவினால் எமது முயற்சி மென்மேலும் விரிவாக்கம் பெறுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

# இலக்கியத்தில் மாற்றுத்திறனாளிகள்

# இலக்கியம் மனிதவாழ்க்கையின் பிரதிபலிப்பு

- லதா ராமகிருஷ்ணன்

இலக்கியம் என்பது மனிதவாழ்க்கையின் பிரதிபலிப்பு என்றும், மனித வாழ்க்கை எப்படியிருக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கினைப் பிரதிபலிப்பதாய் இலக்கியம் விளங்க வேண்டும் என்றும், இவ்விரண்டு பிரதிபலிப்புகளும் கலந்ததே இலக்கியம் என்றும் நம் வாசிப்பனுபவத்தில் விளங்கிக்கொண்டிருக்கிறோம். எழுத்தின் வலிமை எல்லோருக்கும் தெரியும். சிறந்த நேர்மையான படைப்புகள் பல சமூகத்தில் சீரிய மாற்றங்கள் உருவாகக் காரணமாய் இருந்திருக்கின்றன, அத்தோடு இருந்தும் வருகின்றன.

உண்மையின் அடிப்படையில் உருக்கொள்வதுதான் புனைவு அல்லது கற்பனை. உலகில், காலங்காலமாக மாற்றுத் திறனாளிகளின் இருப்பு என்பது நடப்புண்மை. எனில், அவர்களைப் பற்றிய சித்திரிப்புகள் இலக்கியப் படைப்புகளில் இடம் பெற்றுள்ளனவா? உள்ளது எனில் எப்படிப்பட்ட சித்தரிப்புகள்? இலக்கியப் படைப்புகளில் பண்டைய இலக்கியந்தொட்டு சமகால இலக்கியம் வரை, உள்ளூர் இலக்கியம் முதல் உலகளாவிய இலக்கியம் வரை எத்தனை கதாபாத்திரங்கள் மாற்றுத் திறனாளிகளாக இடம்பெற்றிருக்கிறார்கள்? அவர்கள் எவ்விதம் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள்?

**இலக்கிய ஊடக வெளிகளில் மாற்றுத் திறனாளிகள்:**

மாற்றுத்திறனாளிகள் மதிப்பழிக்கப்படுவது, கேலிப்பொருளாக பாவிக்கப்படுவது சின்னத் திரை பெரியதிரைகளில் காலங்காலமாக இருந்துவரும் போக்கு. ஏதாவதொரு சமயத்தில்தான் இதுகுறித்து எதிர்ப்புக்குரல் ஒலிக்கிறது. ஆனால் இத்தகைய போக்குகள் கேள்விக்குட்படுத்தப்படுவதில்லை.

பெரும்பாலான நேரங்களில் மாற்றுத்திறனாளிகள் ஒன்று, அனுதாபத்துடன் அணுகப்படுகிறார்கள். அல்லது, அலட்சியமாக, அணுகப்படுகிறார்கள்.

பாதிப்புக்குள்ளானவர்களால்தான் தங்களுடைய பிரச்னைகளை சரிவர எடுத்துரைக்க முடியும் என்ற பார்வையின் அடிப்படையில் பார்த்தோமானால் மாற்றுத் திறனாளிகள் எத்தனைபேர் இலக்கியப் படைப்பாளிகளாய் விளங்குகிறார்கள்? விளங்கியிருக்கிறார்கள்?

இதுபோன்ற கேள்விகளை உள்ளடக்கிய ஆழமான ஆய்வலசல் எதுவும் தமிழில் வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை. வரவேண்டியது அவசியம்.

கடந்த 30 வருடங்களாக நான் பங்கேற்றிருக்கும் வெல்ஃபேர் ஃபவுண்டேஷன் ஆஃப் தி ப்ளைண்ட் [WELFARE FOUNDATION OF THE BLIND] என்ற "பார்வையற்றோர் நன்நல அமைப்பில்" இந்த நோக்கில் கடந்த பத்துவருடங்களுக் கும் மேலாக பார்வையற்றோரின் பிரச்சினைகள்/வாழ்க்கை குறித்துப் பேசும் நூல்களையும், பார்வையற்றோரின் படைப்பாற்றல்களை வெளிப்படுத்தும் நூல்களயும் வெளியிட்டு வருகிறோம். இதுபோல் வேறு

சில தனிநபர்களும் அமைப்புகளும் முயற்சிகள் மேற்கொண்டிருக்கக்கூடும். ஆனால், இவை போதுமா?

"பெண் என்பதால் பெண்களின் பிரச்சினைகளைப் பற்றி மட்டும்தான் எழுத வேண்டுமா? பெண் என்பதாலேயே எல்லாத்தரப்புப் பெண்களுக்குமான பிரதிநிதியாய் பெண்களின் பிரச்னைகளை, இயல்புகளை, வாழ்க்கையை துல்லியமாக எழுத்தில் வடித்துவிட இயலுமா? என்பதான கேள்விகளைப் போலவேதான் மாற்றுத் திறனாளிகள் விஷயத்திலும் கேள்விகள் எழுவது இயல்பு. தவிர, மாற்றுத்திறனாளிகள் என்ற பிரிவில் பலதரப்பட்ட உடற்குறை உள்ளவர்களும் அடங்குவர்.

எப்படியிருந்தாலும், சமூகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு சீரிய பங்களிக்கும் உரிய வழிவாய்ப்புகள் தரப்பட்டால் அவர்கள் அதில் இன்னும் சிறப்பாகப் பங்களிக்கக் கூடியவர்கள் என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது. சமூக அங்கத்தினர்கள் என்ற அளவில் இலக்கியப்படைப்புகளிலும், ஒளி-ஒலி ஊடகங்களிலும் அவர்களின் பங்கேற்பும் சித்திரிப்பும் எத்தகையதாய் விளங்குகிறது?

**படைப்புவெளியில் பார்வையற்றோர்**

இலக்கியம் நமக்கு எதிராக இயங்குகிறதா? [IS LITERATURE AGAINST US? என்ற அகல்விரிவான கட்டுரையொன்றை சமீபத்தில் படிக்க நேர்ந்தது. டாக்டர் கென்னெத் ஜெர்நிகன் என்ற பார்வையற்றவர் இரு பது முப்பது வருடங்களுக்கு முன்பு எழுதியிருக்கும் அந்தக் கட்டுரை அழுத்தமான ஆத ரங்களுடன் "இலக்கியப் படைப்புகள் பார்வை யற்றோரைப் பார்க்கும்" அறியாமை நிரம்பிய பாரபட்சப் பார்வையை எடுத்துரைத்திருக்கிறது. பார்வையின்மை என்பது தண்டனையாகவும், தெய்வம் தந்த வரமாகும்படியான தூய பண்பாகவும், பார்வைக்குறைபாடுடையவர் பரிதாபத்திற்குரியவர், கயவர், ஏமாற்றுக்காரர், திருமண வாழ்க்கையில் திருப்திகரமாக ஈடுபட முடியாதவர், தனித்தி யங்க இயலாதவர் என பலவிதமான எதிர்மறைச் சித்திரிப்புகளாய் காலங்காலமாய் இலக்கியப் படைப்புகளில் தரப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டியுள்ளார். பார்வையிழப்பிற்குப் பின்இழந்த சொர்க்கம் என்ற அமர காவியத்தை எழுதிய மில்ட்டன் கூட சமூகத்தில் பார்வையற்றோர் குறித்து நிலவும் எதிர் மறைப் பார்வைகளால் ஆக்கிரமிக்கப்பட்டவராய் அத்தகைய எதிர்மறைக் கருத்துகளையே, அதாவது பார்வையின்மை இறப்பை விடக்கொடியது, பார்வையற்றவர் சபிக்கப்பட்டவர் என்ற ரீதியில், சொல்லியிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். நம்முடைய உண்மை நிலையை உலகுக்கு எடுத்துச் சொல்ல நாம் உடனடியாகச் செயலில் இறங்க வேண்டும் என்று கூறியுள்ளார். கண்டிப்பா கத் தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டிய இந்தக் கட்டுரை நம் கையில் கிடைப்பதற்கே இருபதாண்டுகளுக்கு மேல் ஆகிவிட் டது.

கணினி, கைபேசி ஆகிய தொழில் நுட்ப வளர்ச்சிகளின் மூலம் இன்று பார்வைக் குறைபாடுடைய மனிதர்களால் இதுவரை படிக்கக் கிடைக்காமலிருந்த பல புனைவு, அப்புனைவுப் பிரதிகளை அவர்களால் படிக்க முடிகிறது.

ஆனால், இந்த இருபது, முப்பது ஆண்டுகளில் படைப்பு வெளியில் படைப்பாளிகளாகவும், பாத்திரங்களாகவும் இடம் பெறுதல் அளவிலும் தரத்திலும் [quantity-wise and quality-wise]அதிகமாகியிருக்கிறதா என்றால் இல்லையென்றே சொல்ல வேண்டும்.

**காலிழந்தவர் கதாநாயகியாகக் கூடாதா?**

முப்பது வருடங்களுக்குமேல் இருக்கும். விபத்தில் தனது ஒரு காலை இழந்துவிட்ட பதினாறுவயதுப் பெண் சுதா சந்திரன் தன் விடாமுயற்சியால் நடுவில் நின்று போன நாட்டியப்பயிற்சியை செயற்கைக்காலுடன் நிறைவுசெய்து "மயூரி" படத்தில் நடித்து பரவலாகப் பேசப்பட்டுக்கொண்டிருந்த சமயம். அப்போதைய பிரபல எழுத்தாளர் பால

குமாரன் ஒருவருடைய தொடர்கதையின் கதாநாயகனுக்கு செயற்கைக்கால். அவன் மூலம் வாசகர்களுக்கு அறிவுரை தருவதாய் அந்த எழுத்தாளர், "நம்முடைய உடற் குறையை நாம் மறுதலிக்கலாகாது. இயலாத விஷயத்திற்கு முயற்சி செய்யலாகாது. திரைப் படங்களில் நடித்தால் ஒன்றிரண்டு தட வைகள் பரிதாபத்திற்காய் பார்ப்பார்கள். பிறகு...?" என்றெல்லாம் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போய் "மயூரி ஒரு முட் டாள்" என்று மனிதநேயத்தோடு முடித்தி ருந்தார். அந்த சுதா சந்திரன் இன்றளவும் நடித்துக்கொண்டிருக்கிறார்.

மாறாக, "டப் பிங்" அதாவது இர வல் குரல் கொடுத்தல் என்ற, இன்று சின் னத்திரையிலும் வண்ணத்திரையிலும் பெருமளவு பயன்படுத்தப்பட்டுவரும் உத்தி யைப் பயன்படுத்தி காது கேளாத, வாய் பேசாத பெண்ணொருத்தியைத் தங்கள் படத்தில் இயல்பான கதா நாயகியாக நாடோடி படத்தில் நடிக்கச்செய்த முயற்சி பாராட்டிற்குரியது. இதுபோன்ற முயற் சிகள் ஒளி-ஒலி ஊடகங்களில் அதிகம் இடம் பெறவேண்டியது அவசியம். அதற்கு, சமூ கத்திலும், குறிப்பாக படைப்பாளிகளிடம் மாற் றுத் திறனாளிகள் குறித்தபுரிதலும், அவர்க ளாலும் இயல்பாக வாழ்க்கையை எதிர் கொள்ள இயலும் என்ற புரிதலும் அதிகமாக வேண்டும்.

**வேண்டுவது அனுதாபமல்ல: அங்கீகாரமே**

பெண்கவிஞர் என்ற ஒற்றைச் சொற் பிரயோகத்தில் இலக்கியம் தெரிந்த தெரியாத, கவிதை தெரிந்த தெரியாத, நவீன கவிதை தெரிந்த தெரியாத ஆண்களெல் லோருமே படைப்புத்துறையில் ஈடுபட்டுள்ள பெண்களை மதிப்பாய்வு செய்யும் தகுதி யுடையவர்களாகிவிடுவதுபோல், வெகு சுலபமாய் தங்களை புரவலர் நிலையில் ஆலோசகர் நிலையில் மேலடுக்கில் நிலை பெறச்செய்து கொண்டுவிடுவது போலவே உடற் குறையுடையவர்கள்-அவர்கள் எழுத்தாளர்களோ, வாசகர்களோ - உடற் குறையுள்ள படைப் பாளிகளை அனுதா பத்தோடு பார்ப்பதும், அவர்களுக்கு அறி வுரை கூற முற்படுவ தும் தொடர்ந்து நடந்து வரும் ஒன்று.

ஏதேனும் உடற் குறையுடைய வர்கள் படைபாக்கத்தில் ஈடு பட்டால் உடனே அவருக்கு ஆலோசனை கூறவும் அறிவுரை தரவும் பலர் முன் வந்து விடுகிறார்கள். "பார் வைக் குறை உடையவர்கள் பார்வை யின்மை, அது சார்ந்த பிரச்சி னைகளையே முன்னுரிமைப்படுத்தி எழுத வேண்டும். ஏனெனில், அவற்றையெல்லாம் அத்தனை நம்பகத்தன்மையோடு மற்ற வர்களால் எழுத இயலாதல்லவா?" என்று தங்கள் ஆலோச னைகளுக்கு நியாயம் கற்பிப்பார்கள். பார்க்க முடியாது, பேச முடி யாது, கேட்க முடியாது என்ற நிலையிலும் கல்வி கற்று தேர்ச்சி பெற்று பார்வையற்றவர்களின் நலவாழ் வுக்காகப் பெரும்பங்காற்றிய ஹெலன் கெல்ல ருக்கும் இந்த அனுபவம் உண்டு. அவர் தன் னுடைய சுயசரிதையில், தான்பட்ட துன் பங்களை எழுதியபோது அவருடைய எழுத தைக் கொண்டாடிய சமூகம், சமூகத்தின் ஓர் அங்கத்தினராய் அவர் சமூக அவலங்கள் குறித்து எழுதியபோது, அவை குறித்த தனது அக்கறையான பார்வை களை, கருத்துகளை முன்வைத்தபோது அந்த முயற்சியை எளிதாகப் புறந்தள்ளி விட்டனராம். REBEL LIVES என்ற வரிசையில் வெளியிடப்பட்டுள்ள "ஹெலென் கெல்லர் நூல் இதை விளக்கமாக





எடுத்துக் காட்டுகிறது என்று விவரம் கிடைத்தது.


**பார்வையின்மையும் படைப்பாக்கமும்**


சில வருடங்களுக்கு முன் எங்கள் அமைப்பின் சார்பாக "பார்வைக் குறைபாடுடைய கவிஞரொருவரின் கவிதைகளைத் தொகுப்பாகக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டபோது கவிஞரின் பார்வைக் குறையைக் குறிப்பிடுவதா, வேண்டாமா என்ற ஒரு கேள்வியெழுந்தது. அது வேண்டுமா, வேண்டாமா என்பதைவிட, தேவையா தேவையில்லையா? ஆனால், பாடபுத்தகங்களை வாசித்துக்காட்டவே ஆளில்லாமல் பார்வையற்ற மாணவர்கள் சிரமப்படுவதைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது அதைத்தாண்டி இலக்கிய ஆர்வத்தையும், பரிச்சயத்தையும் வளர்த்துக்கொண்டு படைப்பாளியாகவும் உருப்பெறுவதிலுள்ள கூடுதல் உழைப்பை, முனைப்பை, அக்கறையை, ஆர்வத்தை அடிக்கோடிட்டுக் காட்ட அவருடைய பார்வையின்மையை சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம் என்று தோன்றியது. தர்மபுரி அரசுக் கலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்துவரும் கவிஞர் கோ.கண்ணனின் முதல் கவிதைத் தொகுப்பான "ஓசைகளின் நிறமாலை",அதைத் தொடர்ந்து நவீன விருட்சம் வெளியீடாக பிரசுரம் கண்ட "மழைக்குடை நாட்கள்" ஆகிய இரண்டு கவிதைத் தொகுப்புகளுமே குறிப்பிடத்தக்க கவிதைகளைக் கொண்டவை.

தனது கவிதையொன்றில் காலங்காலமாய் பார்வையற்றவர்கள் எத்தனையையோ சாதித்து வருகின்றனர். இருந்தும், காசி படத்தில் வருவதுபோல் இரக்கத்திற்குரிய பிச்சைக்காரனாகவே பார்வையற்றோர் ஊடகங்களில் தொடர்ந்து சித்திரிக்கப்பட்டு வருகிறார்கள் என்று வேதனையோடு சாடியிருப்பார் கவிஞர்.

**சமூகமும் மாற்றுத்திறனாளிகளும்**

சமூகத்தில் இன்று பார்வையற்றோர் பிச்சைக்காரர்களாக வலம் வருவதேயில் லையா என்று எதிர்வாதம் செய்யலாம். ஆம், உடற்குறை உள்ளவர்களும், உடற்குறை யற்றவர்களுமாய் எண்ணிறந்த பிச்சைக் காரர்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். பிச் சைக்காரர்கள் வங்கிகளில் கொள்ளைகொள் ளையாகச் சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்று நகைச்சுவையாகப் பேசி, வெடிச் சிரிப்பு சிரிப்பதோடு நம் சமூகப்பிரச்சினை முடிந்து விடுமானால் அது எத்தனை அவலம். இந்தப் பிச்சைக்காரர்கள் எப்படி உருவாகிறார்கள், இவர்களைப் பிச்சைக் காரர்களாகவே இருக்கச் செய்வதன் மூலம் எத்தனை அதிகமான மனிதவளத்தை விரயமாக்கிக் கொண்டிருக்கிறோம், இவர்களுக்கான மறுவாழ்வில்லம் உண்மையிலேயே இவர்களுக்கு மறுவாழ் வளிக்கும் விதத்தில் இயங்குகின்றனவா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில்தேட என்று நாம் முழு மனதோடு முயற்சிசெய்யப் போகிறோம்?





சமூகம் என்பது எல்லாவகையான மனிதர்களின் அக புற வளர்ச்சிக்கு இடமளிப்பதாக, வழிவகுப்பதாக இருக்க வேண்டும். உடற்குறையுள்ளவர்களை அந்நியமாகப் பார்க்கும் போக்கு மாறவேண்டும். சிறு வயதிலிருந்தே மாற்றுத்திறனாளிகள் பற்றிய புரிதலை வளர்க்க வேண்டியது அவசியம். அதற்கேற்றாற்போல் கல்வித் திட்டம் உருவாக்கப்படவேண்டும். உடற்குறை என்பது மனிதருக்குச் சிறுமை சேர்ப்பதல்ல. அவரை அரைமனிதராக்குவது அல்ல என்ற உண்மை மனிதர்கள் மனங்களில் பதிய வேண்டும். எத்தனை ஆரோக்கியமான உடல் இருந்தாலும், ஒருவருக்குத் தேவை

யான எல்லாவற்றையும் அவராலேயே செய்து கொண்டுவிட முடிகிறதா என்ன? எடுத்துக்காட்டாக, இரண்டு கால்களும் உறுதியாக இருப்பதாலேயே ஒருவர் தினமும் நாற்பது மைல்கள் நடந்துபோகிறாரா என்ன? யாரோ ஒருவர் இயக்கும் பேருந்தில்தானே போகிறார்? யாரோ அமைத்த சாலையில்தானே போகிறார்? அவ்வளவு ஏன், முகமறியாத யாரோ உழுது பயிரிட்டு விளைச்சல் செய்த அரிசியையும், காய்கறிகளையும் உண்டுதானே நாமெல்லோரும் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்! வாழ்க்கையைப் பற்றிய இந்தப் புரிதல் நம் ஒவ்வொருவருக்கும் மிகவும் தேவை." மாற்றுத்திறனாளி" என்ற சொற்பிரயோகம் இதைத்தான் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மனித நேயத்திற்கே ஆதாரம் இந்தப் புரிதல் தான். இலக்கியம் மனிதவாழ்க்கையின் இத்தகைய அடிப்படைக் கேள்விகளையும், புரிதல்களையும் தன் கதைக்களங்களாக, பின்புலங்களாகக் கொண்டு இயங்கும்போது தான் அது வாழ்க்கையை அதன் பல் பரிமாணங்களில் பிரதி பலிப்பதாக மேம்படும். அத்தகைய மேம்பாட்டிற்கு "படைப்பு வெளி" மாற்றுத் திறனாளிகளையும் எழுதுவோராகவும் வாசிப்போராகவும், கதைக் கருக்களாகவும், முதன்மைப் பாத்திரங்களாகவும் உள்ளடக்கியதாக மாறவேண்டியது மிகவும் அவசியம். அதற்குச் செய்யவேண்டியவை யாவை?

**செய்யவேண்டுவன**

தமிழைப் பொறுத்தவரை இன்று வரையான படைப்பு வெளியில் பார்வையற்றவர்கள் உள்ளிட்ட மாற்றுத் திறனாளிகளை முதன்மைப்பாத்திரங்களாக முன்னிறுத்தி வெளியாகியுள்ள படைப்புகள் யாவை, எத்தனை, அவற்றில் மாற்றுத்திறனாளிகள் எவ்விதம் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள், படைப்பு வெளியில் எழுதுவோராக, வாசிப்போராக அவர்கள் பங்கு எத்தகையதாக இருந்து வந்திருக்கிறது போன்ற தரவுகளை சேகரித்துத் தொகுக்க வேண்டியது அவசியம்.

மாற்றுத்திறனாளிகள் என்று கூறுவதாலேயே "நாம்", "அவர்கள்" என்ற இருமுனைப் பிளவை நாம் முதன்மைப் படுத்துவதாகி விடக்கூடாது. யாரோ மூக்குக்கண்ணாடியைக் கண்டுபிடித்துவிட்ட காரணத்தால் அவர் என்றும் நன்றிக்குரியவர்ஸ இன்று அதை விதவிதமான வண்ணங்களிலும் வடிவங்களிலும் அணிந்துகொண்டு வலம் வருவோர் நம்மில் எத்தனையெத்தனை பேர்! அப்படித்தான், இங்கே யாருடைய உடலுமே முழுநிறைவான ஆரோக்கியத்துடன் இல்லை. அத்துடன் இருந்து விடுவதுமில்லை. இந்த உண்மை நம் எல்லோருக்கும் புரிய வேண்டியது அவசியம்.

வெகுமக்கள் ஊடகங்களில் மாற்றுத்திறனாளிகளை மதிப்பழிக்கும் சித்தரிப்புகளை, காட்சியமைப்புகளை, சொற்பிரயோகங்களை சமூகப்பிரச்சினையோடு வன்மையாகக் கண்டிக்கவேண்டும். "தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்டவடு" என்பார் வள்ளுவர். எனவே, மாற்றுத்திறனாளிகளைக் காயப்படுத்தும் சொற்களைப் பயன்படுத்துவது இயல்பு, அதனால் அன்பு இல்லையென்று ஆகிவிடாது என்ற வாதம் சரியல்ல. இதை நாம் எல்லோரும் உணரவேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் படைப்பாளிகளாக உருவாவதற்கான வழிவகைகளை சமூகம் உருவாக்கித் தரவேண்டும். உதாரணமாக, காதுகேளாத மனிதர் கதையோ கவிதையோ எழுத முனைந்தால் அந்த முயற்சிக்கு அவருடைய குடும்பமோ சகமனிதர்களோ முட்டுக்கட்டையிடுவதாய் பேசுவதோ செயல்படுவதோ கூடாது.

மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைகள், திறனாற்றல்கள் குறித்த விழிப்புணர்வு சமூகத்தில் பரவலாக்கப்படுதல் எத்தனை அவசியமோ அத்தனை அவசியம் படைப்பு வெளியில் அவர்கள் படைப்பாளிகளாகவும் பாத்திரங்களாகவும் இடம்பெறுதல். அவற்றின் மூலம் சமூகத்தில் அவர்களுடைய இடமும் பங்காற்றலும் மேலும் வலுப்பெறும்.


இன்பத்தேன்
மென்பான நிலையம்
FRESH JUICE
இயற்கைப் பழச்சாறு
சிவலிங்கப் புளியடி, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
விசேட வைபவங்களுக்கு
077 433 1874
இன்பத்தேன்
மென்பான நிலையம்




ISSN 2513-2989

எவகிறீன் அச்சகம், இல. 693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9893